Q6:3
M89
[illegible]

# THE ARTICLES OF RELIGION,

WITH

*SCRIPTURE PROOFS AND NOTES FOR THE USE OF THE CANDIDATES FOR THE BISHOP'S PRIZE EXAMINATION, 1888.*

BY

*The Rev. S. PAUL., C. M. S.*

ARTICLES VI—XVI.

## வேத சித்தாந்தப் பிரமாணங்கள்.

இதில்

அங்கிலேய திருச்சபையின்

முப்பத்தொன்பது பிரமாணங்களில்

6—16 வரையுமுள்ள பிரமாணங்களும்,

அவைகளையமைத்த வேத ஒத்துவாக்கியங்களும்,

பல குறிப்புகளும்

அடங்கியிருக்கின்றன.

Madras:

[illegible]ED FOR THE AUTHOR AT THE ALBINION [illegible] MADRAS.

1888.

Q63
H85

28/2·1888 (798)

28/2-88

# வேதசித்தாந்தம்.

6. இரட்சிப்படைவதற்குப் பர.
வேதாகமங்களே போதுமானது.

1. இரட்சிப்படைவதற்கு அவசியமடியவைகளெல்லாம் பரிசுத்த வேதவாக்கியங்கியிருக்கிறது. ஆகையால் 2. அவைகளிததும், அவைகளால் ரூபிக்கப்படாததுமான யதையும் விசுவாசிக்கவேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும் இரட்சிப்புக்கு அவசியம் என்று எண்ணவும் ஒருவருக்கும் கட்டளை யிடக்கூடாது. பரிசுத்த வேதாகமங்கள் எவையெனில், திருச்சபை எக்காலத்திலும் சந்தேகப்படாமல் திவ்விய அதிகாரமுள்ளவைகளென்று ஒப்புக்கொண்டிருக்கிற பழைய ஏற்பாட்டிலும் புதியஏற்பாட்டிலும் அடங்கியிருக்கிற ஆகமங்களேயாம்.

திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களின்
பேரும் இலக்கமும் அடங்கிய அட்டவணை.

ஆதியாகமம்.
யாத்திராகமம்.
லேவியராகமம்.
எண்ணாகமம்.
உபாகமம்.
யோசுவா.
நியாயாதிபதிகள்.
ரூத்.
சாமுவேலின் க-ம். ஆகமம்.
சாமுவேலின் உ-ம் ,,

இராசாக்களின் க-ம் ஆகமம்.
இராசாக்களின் உ-ம் ,,
நாளாகமத்தின் க-ம் ,,
நாளாகமத்தின் உ-ம் ,,
எஸ்றா [க-ம் ஆகமம்.]
நெகேமியா [உ-ம் எஸ்றா.]
எஸ்தர்.
யோபு.
சங்கீதங்கள்.
நீதிமொழிகள்.

...தீர்க்கத் தரிசிகளின்
...ஆகமங்கள் பன்னிரண்டு.

...முள்ள ஆகமங்களைக்குறித்து
...சொல்லுகிறபடி, நன்மாதிரியைக்
...த்தில் தேரும்படியாகத் திருச்
சிக்கும்படி நியமித்திருக்கிறதேயல்
...களைக்கொண்டு யாதொரு உபதேசத்தை
அவைகளைப் பிரயோகிக்கிறதில்லை. அவை

| | |
|---|---|
| ...வின் க-ம் ஆகமம். | பாருக்தீர்க்க தரிசியின் ஆகமம். |
| ...ரூவின் ச-ம் ,, | |
| ...ாபியாவின். ,, | மூன்று வாலிபரின் பாட்டு. |
| ...யூதீதின். ,, | சூசன்னாளின் சரித்திரம். |
| எஸ்தர் ஆகமத்தின் குறை பங்கு. | பெல்லையும் வல்லசர்ப்பத்தையும் குறித்த ஆகமம். |
| ...ஞான ஆகமம். | மனாசேயின் ஜெபம். |
| சீராக்கின் குமாரன் இயேசுவின் ஆகமம். | மக்கபேரின் க-ம் ஆகமம். |
| | மக்கபேரின் உ-ம். ,, |

சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டிலுள்ள ஆகமங்கள் எல்லாவற்றையும், நாமும் திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களென்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஒத்துவாக்கியங்கள்.

1. இரட்சிப்புக்கு அவசியமானதெல்லாம் வேதாகமத்திலுண்டு. "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவ



ருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20: 31.) "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துகளை நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோசன முள்ளவைகளாயிருக்கிறது." 2 தீமோ. 3: 15-17. மேலும் சங். 19: 7-9. பார்.

2. அவைகளில் கண்டிராததை.....கட்டளையிடக்கூடாது. "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." (ஏசா. 8: 20) "நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா. 4: 2.) "நான் உனக்கு விதிக்கிறயாவையும் செய்யும்படி கவனமாயிரு நீ அதனோடு ஒன்றும் கூட்டவும் அதில் ஒன்றும் குறைக்கவும்வேண்டாம்." (12-32.) "சிலர் உங்களைக் கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப்பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்." (கலா. 1: 7, 8.) மேலும் 2 தீமோ. 4: 2-4; நீதி. 30: 5, 6; 2 பே. 1: 21; வெளி. 22: 18, 19. பார்.

வியாக்கியானக்குறிப்புகள்.

திருச்சபையில் தர்க்கமுள்ள பிரமாணங்களில் இதை முதலாம் பிரமாணம் என்கலாம். வெஸ்லெயன் அறிக்கையில்

(Helevtic Confession.) இதுபோலொத்த ஒரு பிரமாணம் முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது.

**1. ஒழுங்கு.** அங்கிலேய சபையானது சுமார் 1,500 வருஷங்களாக சர்வலோக திருச்சபையால் ஏகமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்த இரட்சிப்புக்குறிய பொதுவான விசுவாச சத்தியங்களை ஞானமாய் முதல் ஐந்து பிரமாணங்களால் உறுதிப்படுத்திக்கொண்டு, அதன்பின் அவ்வைந்து உபதேசப் பிரமாணங்களும் பின்வரும் மற்ற அபிப்பிராய அல்லது தர்க்கமுள்ள கோட்பாட்டுப் பிரமாணங்களும் நிறுக்கப்படவேண்டிய தராசு அல்லது பரீட்சிக்கப்படவேண்டிய உரைகல் இன்னது என்று தீர்மானிக்கப்படும் விசுவாசத்தின் சட்டத்தை இந்தப் பிரமாணத்தினால் பிரசித்தப்படுத்துகிறது.

**2. மாறுதல்.** 1552-ம் வருஷத்து 42 பிரமாணங்களில் “பரிசுத்த வேதாகமங்கள் எவையெனில்” என்னும் வாசக முதல் அதற்குப் பின்வரும் திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களின் அட்டவணையும், அப்போகிரபா ஆகமங்களின் அட்டவணையும் அடங்கிடபின் பங்கெல்லாம் இல்லை; 1562-ம் வருஷத்து 39 பிரமாணங்களில் அவை சேர்க்கப்பட்டது. மேலும் 1552-ம் வருஷத்துப் பிரமாணத்தில் “அவைகளில் கண்டிராததும் அவைகளால் ரூபிக்கப்படாததுமான யாதொன்றையும்” என்ற வார்த்தைகளுக்குப்பின், “அவைகள் சிலதரம் பக்திமான்களால் அங்கிகரிக்கப்பட்டு, கிரமத்துக்கும், சீர் அடைதலுக்கும் பிரயோஜனமாயிருந்தபோதிலும்” என்ற வாசகமிருந்தது. அதை 1562-ம் வருஷத்தில் நீக்கிவிட்டார்கள்.

**3. மொத்த பொருள்.** (1.) விசுவாசத்துக்குரிய சட்டம் வேதாகமமேயன்றி பாரம்பரைகள் அல்ல; (2.) திவ்விய அதிகாரமுள்ள வேதாகமங்களெவை; (3.) “மற்றமுள்ள ஆகமங்கள்” என்னும் பேரால் குறிக்கப்படும் புஸ்தகங்களை பற்றிய அங்கிலேய சபையின் தீர்மானம் இன்னது என்பவைகளே இந்தப் பிரமாணத்தின் மொத்தப்பொருள்.



**4. வேதாகமம்.—பாரம்பரை.** (முதலாம் நம்பர் ஒத்துவாக்கியங்களைப்பார்.) உரோமைச்சபையானது வேதாகமத்தின் திவ்விய அதிகாரத்தை நம்மைப்போலவே ஒப்புக்கொண்டபோதிலும், கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்துக்கும் நடைக்கைக்குமடுத்த எல்லாச் சட்டங்களும் புதியேற்பாட்டில் அடங்கியிருக்கிறதில்லையென்றும்; எழுதப்படாமல் அப்போஸ்தலரால் வாய்மொழியாய் கூறப்பட்டு யதார்த்தமாய் இறங்கி வந்த பல உபதேசங்களாகிய பாரம்பரை திருச்சபையின் ஆதீனத்துக்குள்ளிருக்கிறது என்றும், அப்பாரம்பரைகள் திவ்விய அதிகாரமுள்ளவைகளென்றும் சொல்லுகிறார்கள். மேலும் அவர்கள், ஒரு பாரம்பரையின் உண்மையை அல்லது உண்மைத் தப்பை தீர்மானிக்கும் தவறாமையுள்ள அதிகாரம் திருச்சபைக் குண்டென்றும், அவ்வதிகாரத்தை ஆட்சேபிப்போர் சபிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த அவர்கள் அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தும்படி உரோமைச்சபை திரண்டு சங்கத்தின் நாலாம் கூட்டத்தில் (கி. பி. 1546) பின்வரும் தீர்மானத்தை நிரூபித்தது. “சத்தியமானது எழுதப்பட்ட ஆகமங்களிலும் எழுதப்படாத பாரம்பரைகளிலும் அடங்கியிருக்கின்றன. அவைகள் கிறிஸ்துவின் வாயிலிருந்து நேராயாவது, பரிசுத்த ஆவியின் போதனையினாலாவது அப்போஸ்தலரால் பெற்றுக்கொள்ளப்பட்டு நமது காலமட்டும் இறங்கிவந்திருக்கிறது. இச்சங்கமானது பழைய ஏற்பாடு என்னும் இரண்டு ஆகமங்களிலுமுள்ள எல்லாப் புஸ்தகங்களும் ஒரே தேவனால் அருளிச்செய்யப்பட்டதால் அவ்விரு ஆகமங்களையும் ஒரே அளவாக மதித்து பக்தியோடும், எண்ணிக்கையோடும் அங்கீகரித்துக் கொள்ளுகிறது. அதுபோலவே விசுவாசத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் அநுகூலமான பாரம்பரைகளும் கிறிஸ்துவின்வாயிலிருந்து அல்லது பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் பெற்றுக்கொள்ளப்பட்டு பொதுவான சபையால் தொன்றுதொட்டு இறங்கிவந்ததால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று அங்கிகரிக்கிறது” நம்முடைய அங்கிலேய சபையோ மேலே கூறிய சாதனையை

உதாகரித்து, பரிசுத்தவேதவாக்கியங்களில் "கண்டிராததும் அவைகளால் ரூபிக்கப்படாததுமான யாதொன்றையும் விசுவாசிக்கவேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும் இரட்சிப்புக்கு அவசியமென்று எண்ணவும் ஒருவருக்கும் கட்டளையிடக்கூடாது" என்று தீர்மானிக்கிறது. இதுவே விசுவாசத்துக்குரிய சட்டத்தைப்பற்றி நமது சபைக்கும் உரோமை சபைக்குமிருக்கும் பேதமாம்.

**5. பாரம்பரை ஆட்சேபம்–நிராகரணம்** விசுவாசிக்கவேண்டிய விஷயங்களுக்கு வேதாகமங்கள் போதாது, பாரம்பரையும் வேண்டியது என்பதற்கு ரோமைச்சபை பின்வரும் வேத ஆதாரங்களைக் கூறுவதுண்டு?

(1.) ஆட்சேபம் (பரி. யோவான். 16 : 12.) "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்." என்று இரட்சகர் சொல்வதைக்கொண்டு ஆண்டவர் இன்னும் வாய்மொழியால் திருச்சபைக்கு ஒப்புவித்து, பாரம்பரையாய் இறங்கி வரவேண்டிய விசுவாச விஷயங்கள் பல உண்டு என்று சொல்லுகிறார்கள்.

நிராகரணம். அடுத்த வசனத்தில் "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று இரட்சகர் வாக்களித்திருப்பதால், சீஷர் தாங்கமாட்டார்களென்று, மறைவாக வைக்கப்பட்ட தெய்வீக சத்தியங்கள் பரிசுத்த ஆவியினால் பின்பு அருளிச்செய்யப்பட்டன, அவை அனைத்தையும் அவர்கள் தங்கள் ஆகமங்களில் எழுதிவைத்தார்கள். ஆதலால் இன்னும் கொஞ்சமுண்டு என்று அனுமானிக்க அவசியமில்லை.

(2.) ஆட்சேபம். (பரி. யோவான். 21: 25.) இந்த வசனத்தைக்கொண்டு இயேசு செய்ததும் சொன்னதுமான இன்னும் அநேக விஷயங்கள் பாரம்பரையாய் இறங்கி வந்திருக்கிறது என்கிறார்கள்.



நிராகரணம். இரட்சகர் சொன்னதும் செய்ததுமான அநேக விஷயங்கள் இன்னதென்று பூரணமாய் இன்னும் தெரியாது என்பதுமெய், சுவிசேஷத்தில் அடங்கியதேயன்றி அதற்கு மிஞ்சி ஒன்றுமில்லையென்று நாம் சொல்லுகிறதில்லை. பாரம்பரையின் மூலமாய் எல்லாம் திட்டமாய் இறங்கிவந்து விட்டதென்றும் ஒருவரும் சொல்லக்கூடாது. மேலும் இந்த ஆட்சேபனையின்படி வேதாகமும் தற்கால பாரம்பரையும் இரண்டும் கூடினாலும் இன்னும் பாக்கியுண்டு என்று சொல்லவேண்டியதாய்த் தானிருக்கிறது.

(3.) ஆட்சேபம். (அப். 1: 3.) இந்த வசனத்தைக்கொண்டு தேவனுடைய இராட்சியத்துக்கடுத்த அநேக காரியங்கள் பேச்சினால் சீஷருக்கு வெளிப்படுத்தப்பட்டு இறங்கி வந்ததென்பார்கள்.

நிராகரணம். நல்லது இரட்சகர் உயிர்த்தெழுந்ததற்கும் பரமேறினதற்கும் மத்தியிலுள்ள 40 நாட்களிலும் பேசினதும் செய்ததும் இன்னதென்பதைப்பற்றி வேதாகமத்திலாவது பாரம்பரைகளிலாவது யாதொரு குறிப்பும் இல்லை. ஆதலால் அவை இன்னதென்று தீர்மானிக்கலாகாது. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்," என்ற வாசகப்படி (உபா. 29: 29.) நம்முடைய இரட்சிப்புக்குரிய விசுவாச விஷயங்கள் எவ்வளவோ அவ்வளவும் வேதாகமத்தில் அடங்கியிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேண்டியது.

(4.) ஆட்சேபம் 1 கொரி. 11: 16-ல் பரி. பவுல் ஒருதகராறைத் தீர்க்கும்படி திருச்சபை வழக்கத்தை நியாயமாகச்சொல்லிக்கொண்டிருக்கிறார் அல்லவா, அது பாரம்பரையோடு சேர்ந்ததுதானே.

நிராகரணம். அது விசுவாசிக்கவேண்டிய விஷயமுமல்ல, இரட்சிப்புக்கு அவசியமான போதனையுமல்ல, ஸ்திரீகள் தலையை

மூடிக்கொள்வதைப்பற்றிய ஒரு சடங்கை அடுத்தது. முறைமைகளையும், சடங்குகளையும் ஏற்படுத்துகிறதற்கு திருச்சபைக்கு அதிகாரமுண்டென்பதை அங்கிலேயச்சபை தன் 20-ம் பிரமாணத்தில் ஒத்துக்கொள்ளுகிறது. மேலும் நமது சபை தன்னுடைய 34-ம் பிரமாணத்தினால் திருச்சபையின் பாரம்பரை வழக்கங்களை மீறுகிறவன் வெளியரங்கமாய்க் கண்டிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறது.

(5.) ஆட்சேபம். 1 கொரி. 11: 2-ல் சொல்லப்படும் "ஒப்புவித்த கட்டளைகள்" 1 தீமோ 6: 20-ல் சொல்லப்படும் "ஒப்புவிக்கப்பட்டவை" 2 தீமோ. 1: 13, 14-ல் சொல்லப்படும் "கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டம்," "ஒப்புவிக்கப்பட்ட நற்பொருள்" ஆகிய இக்குறிப்புகளால் திருச்சபைக்கும், அதின் கண்காணிகளுக்கும் பலமுறைகளும் உபதேசங்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், அவைகளைச்சபையானது பந்தோபஸ்து செய்து பின்னடியாருக்கு வைத்து வருகிறதென்றும் ருசுவாகிறதில்லையா என்பார்கள்.

நிராகரணம். அதெல்லாம் மெய்யென்று நாமும் ஒத்துக்கொள்ளுகிறோம் ஆனால் அவைகளெல்லாம் எழுதப்படாத பாரம்பரைகளாயிராமல், வாய்மொழியால் அல்லது வினா விடையான ஞானோபதேசமாக கற்றுக்கொண்ட போதனைகளாகவே இருந்தன. அந்தப்போதனையை அவர்கள் உள்ளபடி போதித்துப்பின்னடியாரும் அதின்படி நடக்கும்படித்திட்டம் செய்து வரவேண்டியது அவசியம். மற்றப்படி அவரவர் தம் தம் இஷ்டப்படி சுவிசேஷ சத்தியங்களை தாற்பரியப்படுத்தி சபையைக்கொடுத்துப் போடுவார்கள். ஆதலால் மேற்படி வசனங்கள் பாரம்பரைகளை அடுத்ததாயிராமல், சுத்த சுவிசேஷ போதனையை கலப்பில்லாமல் காத்து வருவதைப்பற்றிய ஏற்பாடுகளாய் மாத்திரமிருக்கிறது.

6. **திவ்விய அதிகாரமுள்ள வேதாகமங்கள் எவை?** திருச்சபை எக்காலத்திலும் சந்தேகப்படாமல் ஒப்புக்கொண்டிருக்



கிற பழைய புதிய ஏற்பாட்டு ஆகமங்களை திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களாக அங்கிலேய சபை தீர்மானிக்கிறது "திவ்விய அதிகாரமுள்ள" என்னும் வாசகம் இங்கிலிஷில் "கனோன் ஆகமங்கள்" (Canonical Books) என்றிருக்கிறது (1) கனோன் என்பது கிரேக்கைப்பதம் இதற்கு "நேர்கோல்" என்பது சரியான அருத்தம். சட்டம், ஒழுங்கு, பிரமாணம் என்பதும் அதன் சார்பு அருத்தங்கள் என்று சொல்லலாம். கனோன் என்றபேர் திவ்விய அதிகாரமுள்ள வேதாகமங்களின் அட்டவணைக்கும், நற்கருணை ஆராதனைக்கும் (Canon of tho Mass), திருச்சபை ஏற்பாடுகளுக்கும் (Canon, Ecclesiastical), குருமுறையிலுள்ள அந்தஸ்துக்கும் (Canon திருச்சபை ஜெபவேளைக்கும் (Canonical Hours) பொதுவாக வழங்கப்படுகிறது.

(2.) கனோன் ஆகமங்கள்—நம்முடைய விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் சட்டமாக தேவனால் ஏவி எழுதப்பட்ட பிரபந்தங்களே கனோன் ஆகமங்களாகும்.

(3.) பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் திவ்விய அதிகாரமுள்ளதான கனோன் ஆகமங்கள் தான் என்பது அவை ஒன்றாகச் சேர்க்கப்பட்ட சரித்திரக் குறிப்புகளால் தெரியவரும்.

*a.* நியாயப்பிரமாண ஆகமங்களை மோசே என்பவர் எழுதியானபின்பு அதை லேவியரிடத்திலும் இஸ்ரவேல் மூப்பரிடத்திலும் ஒப்புவித்தார் (உபா. 31-9). அப்பால் அது சாட்சியாக உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வைக்கப்பட்டது. 26-வச.

*b.* யோசுவா தன்கால நடபடிகளையெல்லாம் நியாயப்பிரமாண புஸ்தகத்தில்எழுதினதாக வாசிக்கிறோம். (யோசு 24-26) "புஸ்தகத்தில் எழுதி" என்பது முந்தின அதனோடு சேர்ந்த ஆகமமாக எழுதிச்சேர்த்தான் என்பதை உணர்த்துகிறது.

*c.* அதன்பின் சாமுவேல் தீர்க்கதரிசி இராசாங்கத்தின் முறையையெல்லாம் ஒரு புஸ்தகத்தில் எழுதி "கர்த்தருடைய சந்நிதியில் வைத்தான்" என்றுபார்க்கிறோம். (க. சா. 10-25.)

*d*. அதற்குப் பிந்தின காலத்தில் இலக்கியாவென்ற பிரதான ஆசாரியன், கர்த்தரின் ஆலயத்தில் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டுபிடித்ததாகச் சொல்லுகிறார். இதில் நியாயப்பிரமாணமென்பது அக்காலமட்டும் எழுதப்பட்டு மகாபரிசுத்த ஸ்தலத்தில் கனோன் ஆகமமாகவைக்கப்பட்ட ஆகமங்களையெல்லாம் குறிக்கவேண்டியது. (2 இரா. 22-8.)

*e*. "ஏசாயா தமது தீர்க்கதரிசன போதனைகளை உணர்த்தும்படி கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி விசாரியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது" என்கிறார். (ஏசா. 34-16) இதினால் அவர் காலமட்டுமுள்ள ஆகமங்கள் கனோன் ஆகமமாக எண்ணப்பட்டு வந்ததென்று தோன்றும்.

*f*. தானியேல் தீர்க்கதரிசி சிறையிருப்பின் காலத்தின் வருஷத்தொகையை "புஸ்தகங்களால்" அறிந்துகொண்டதாகச் சொல்லுகிறார். இவர்காலத்துக்குமுன் திவ்விய அதிகார ஆகமங்களில் மிச்சமானவை ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருந்தன என்று சொல்லவேண்டியது. (தானி. 9 : 2.) மோசே முதல் சிறையிருப்பு மட்டுமுள்ள தீர்க்கதரிசிகள் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதிவைத்தவைகளெல்லாம் இஸ்ரவேலின் காவலாளராயிருந்த ஆசாரியர்களால் கனோன் ஆகமமாகச் சேர்க்கப்பட்டிருந்தன என்று தோன்றுகிறது.

*g*. இஸ்ரவேலர் சிறையிலிருந்து திரும்பி வந்தபின்பு கனோன் ஆகமங்களை ஒன்றாகச்சேர்த்து முடிக்கும் வேலையை எஸ்றா, எடுத்துக்கொண்டு அப்படியே பழைய ஏற்பாட்டு கனோன் ஆகமங்களைத் தீர்மானித்தார் என்பது ஆட்சேபிக்கப்படாமல் ஒப்புக்கொள்ளவேண்டிய ஒரு பாரம்பரையாயிருக்கிறது.

இந்த ஆகமங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு முறையே நியாயப்பிரமாணங்கள், தீர்க்கதரிசனங்கள் சங்கீதங்கள் என்று அழைக்கப்பட்டன. யூதருடைய பல குற்றங்களைக் கண்டித்துப்பேசுகிற இரட்சகர் அவர்கள் பூர்வவேத ஆகமங்



களில் மாறுதல்கள் செய்ததாக யாதொரு குறிப்பில்லாததாலும், அவரே அதிலிருந்து பலவேதவாக்கியங்களை எடுத்துக் கூறுவதாலும் எஸ்றாவால் முடிக்கப்பட்ட ஆகமங்களே கிறிஸ்துவின் காலத்திலும் இக்காலத்திலும் இறங்கிவந்த பழையேற்பாட்டு கனோன் ஆகமங்கள் என்று ருசுப்படுகிறது.

(4.) புதியயேற்பாட்டு ஆகமங்கள், திவ்விய அதிகாரமுள்ள கனோன் ஆகமங்கள் தான் என்பது பின்வரும் நியாயங்களினால் விளங்கும்.

*a*. புதியயேற்பாட்டின் முதலாம் கனோன் அட்டவணை கி. பி. 200-ல் இருந்த ஒரிஜன் என்பவரால் எழுதப்பட்டதாக தெரியவருகிறது. இதில் 4 சுவிசேஷங்கள்; பரி. பவுலின் 14 நிருபங்கள்; அப்போஸ்தலர்; பரி. பேதுருவின் 2 நிருபங்கள்; பரி. யோவானின் 3 நிருபங்கள்; வெளிப்படுத்தல் ஆகிய ஆகமங்கள் அடங்கியிருக்கின்றன. யாக்கோபு யூதா என்னும் நிருபங்கள்மாத்திரமில்லை. இது வேண்டுமென்றல்ல கைப்பிசகாய் விட்டுவிடப்பட்டதென்று சொல்லவேண்டியது, ஏனெனில் அவரே வேறொரு இடத்தில் அவை இரண்டும் கனோன் ஆகமங்கள்தான் என்று எழுதியிருக்கிறார்.

*b*. யூசிபியஸ், அதனாசியஸ், சிரில்என்பவர்கள் அட்டவணையில் இப்பொழுதிருக்கிற ஆகமங்களின்பேரே அடங்கியிருக்கின்றன.

*c*. நாலாம் நூற்றாண்டு மத்தியில் லவோதிக்காவில் கூடின சங்கத்தார் கனோன் ஆகமங்களின் அட்டவணை செய்திருக்கிறார்கள். அதில் வெளிப்படுத்தல் நீங்கலாக மற்றதெல்லாம் இப்பொழுதுள்ளவைபோலவே இருக்கின்றன.

*d*. அதின்பின் எபிப்பானு, நாசியான் கிரகோரி, பைலாஸ்த்திரியஸ், ஜெரோம், ரூபின், அகுஸ்தின், கர்த்தாகோ நகரியில் 44 கண்காணிகள் கூடிய சங்கம் ஆகிய இவர்களால் வெவ்வேறு கனோன் அட்டவணைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் இப்பொழுதுள்ள புதியேற்

பாட்டாகமங்களை கண்டிருக்கின்றன; ஆனால் கிரகோரியின் அட்டவணையில் வெளிப்படுத்தின விசேஷமும், பைலாஸ்த்திரியசின் அட்டவணையில் எபிரேயர் நிருபமும் மாத்திரம் விடப்பட்டிருக்கின்றன.

*e.* இப்பொழுது நமக்குள் வழங்கும் புதியேற்பாட்டு ஆகமங்களை திவ்விய அதிகாரமுள்ளவைகள் என்று வெவ்வேறான பல தேசங்களிலிருந்த சபைப்பிதாக்களால் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

*f.* இவ்வாகமங்கள் கிறிஸ்துசபை ஆராதனைகளில் பகிரங்கமாய் வாசிக்கப்பட்டு வந்தது.

*g.* இது துவக்கத்திலே அனேக பாஷைகளில் திருப்பப்பட்டு அதற்கு வியாக்கியானங்களும் எழுதப்பட்டு வந்தது.

இந்த முகாந்தரங்கள் இப்பொழுது திவ்விய அதிகாரமுள்ளவைகளென்று திருச்சபை ஒப்புக்கொண்டு அநுசரித்து வருகிற பழைய புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் மாத்திரம் நாம் விசுவாசிக்கவேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும், இரட்சிப்புக்கு அவசியமென்று எண்ணவும் நம்மை ஏவுகிறது.

**7. மற்றுமுள்ள ஆகமங்களைக்குறித்து.** இந்த ஆகமங்கள் அப்போகிரிப்பா என்று அழைக்கப்படுகிறது. அப்போகிரிப்பா (Apocrypha) என்பது "மறைவான" "அதிகாரமற்ற" என்று அருத்தப்படும். உரோமச்சபை இவ்வாகமங்கள் திவ்விய அதிகாரமுள்ளவைகளென்பதற்கு முகாந்தரமாக (1.) இவைகள் பிந்தினகாலத்தில் ஷேமமாய், ஹில்லேல் என்பவர்களால் சேர்க்கப்பட்டன என்றும் (2.) கி. பி. 397-ல் கர்த்தாகோநகரில் கூடின சங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டதென்றும் சொல்லுவார்கள். ஆனால் அங்கிலேயசபையும், அனேக புரோடெஸ்டாண்டு சபைகளும் பின்வரும் முகாந்தரங்களால் அவை திவ்விய அதிகாரமுள்ளவைகளல்லவென்று தீர்மானிக்கிறார்கள்.



(*a.*) அவை எபிரேயு வேதாகமப் பிரதிகளில் இல்லை.

(*b.*) அவை யூதரால் திவ்விய அதிகார முள்ளவைகளாக அங்கிகரிக்கப்படவில்லை.

(c.) புதியேற்பாட்டில் இதிலுள்ளவாசகங்கள் எடுத்துக்கூறப்படவில்லை.

(*d.*) கிறிஸ்து சபைப்பிதாக்கள் இவைகள் அப்போகிரிப்பா ஆகமங்கள் என்று அறிக்கையிட்டிருக்கிறார்கள்.

(*e.*) இப்புஸ்தகங்களின் அக உதாரணங்களே இவைகளின் திவ்விய அதிகாரதன்மைக்கு விரோதமாயிருக்கிறது.

(*f.*) இவை தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதாகவாவது, இதை எழுதினவர்கள் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதினார்களென்று சொல்லவாவது ஏதுவில்லை.

(*g.*) தீர்க்கதரிசன ஆவி நின்றுபோனதாக எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற மல்கியின் காலத்திற்குப்பின் இவை எழுதப்பட்டபடியால் இவை திவ்விய அதிகாரமுள்ளவைகளல்ல. இவ்வாகமங்கள் கி. பி. 300-க்கும் 400-க்கும் இடையிலுள்ள காலங்களில் எழுதப்பட்டவைகளாகத் தோன்றுகிறது.

என்றாலும் இவை நன்மாதிரியைக்கண்டு நல்லொழுக்கத்தில் தேறும்படியாக வாசிக்கலாமென்று அங்கிலேய சபை தீர்மானிக்கிறது.

பிரமாணத்தின் அடியில் காட்டிய பழைய ஏற்பாட்டு அப்போகிரிப்பா ஆகமங்களையல்லாமல் புதியேற்பாட்டு அப்போகிரிப்பா ஆகமங்களும் பலஉண்டு. அவைகளின், 42 சுவிசேஷங்களும், அநேக அப்போஸ்தலர் நடபடிகளும், 12 வெளிப்படுத்தின விசேஷங்களும் அடங்கியிருக்கின்றன.

**7. கொள்கைக்காரர்.** 1. மொந்தாவியர் (Montanism) இவர்களுடைய தலைவனாகிய மொந்தானு என்பவன், அப்போஸ்தலரால் எழுதி ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷ சரித்திரமும், உபதேசமும் அடங்கிய ஆகமங்கள் இரட்சிப்பின் வழிகளை

யும், விசுவாசிக்கவேண்டிய சட்டங்களையும் பூரணமாய் காட்டுகிறதில்லையென்றும், தன் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் பூரணமாய் ஞானங்களை வெளிப்படுத்தியிருக்கிறாரென்றும் போதித்தான்.

பிரிகியா நாட்டில் (கி. பி. 171) மார்க்கஸ் அவுரேலியுஸ் இராயன் ஆளுகையில் எழும்பின இந்த எத்தன் முதலாவது ஆசியாவிலுள்ள சபைக் கண்காணிகளாலும் அதின் பின்மேல்திசை சபையார் எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டான் இவன் பட்சத்தார் பிரகியர் என்றும், காற்றப் பிரிகியர் என்றும் அழைக்கப்படுகிறதுண்டு. திருச்சபையின் மேலான உத்தியோகம் கிடைக்கும் என்றெண்ணியே கிறிஸ்தவளானாளும் பிரிஸ்கில்லாள், மக்சிமில்லாள் என்னும் இரு ஸ்திரீகள் முதலாவது இவனைப் பின்பற்றினார்கள். கடைசியாக இவன் தனக்குண்டென்று சொல்லிக்கொண்டுவந்த தீர்க்கதரிசன வரங்களும், ஆவியின் வெளிப்படுத்தல்களும் அபத்தமென்று கண்காணிகள் தீர்மானித்து அவனைப் பின்பற்றினவர்களை சபைக்குப் புறம்பாக்கினார்கள்.

2. **ரோமானித்தார்.** எழுதப்படாமல் இறங்கிவந்த பாரம்பரைகள் பல உண்டென்றும் அவை கனோன் ஆகமங்களைப் போல் திவ்விய அதிகாரமுள்ளவைகள் என்பதுமே அவர்கள் கோட்பாட்டின் சுருக்கம். அங்கிலேய சபையோ அப்பாரம்பரைகள் வேதாகமத்துக்கு ஒத்த அதிகாரமுள்ளவைகளல்லவென்று இந்தப் பிரமாணத்தால் தீர்மானிக்கிறது.

**கவனிப்பு.** அங்கிலேயசபை! பாரம்பரைகளையாவது! திருச்சபைப் பிதாக்களின் சாட்சிகளையாவது முற்றிலும் தள்ளிவிடுகிறது என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறதில்லை அவைகளை அவர்கள் மனுஷீகசாட்சிகள் என்றும் தெய்வீக பிரமாணங்கள் அல்ல என்றும் மாத்திரம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்பது பொதுவான ஜெபபுஸ்தகத்தின் முகவுரையில் விளங்கும். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் ஞாயிற்



றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரித்தல் முதலியவைகள் அங்கிலேயசபை அங்கிகரிக்கும் பாரம்பரைகள் என்று சொல்லவேண்டியது.

### பூர்வசாட்சி.

**ஜெரோம்.** என்பவர் சுவிசேஷங்கள் மாசில்லாத பூரணமுள்ளவை என்கிறார். (பின்னும் அவர் சொல்வதை பிரமாணத்தில் பார்.) 2. **ஐரேனியுஸ்** "வேத எழுத்துகள் தேவனுடைய வார்த்தையாலும், அவருடைய ஆவியாலும் சொல்லச்சொல்ல எழுதப்பட்டவைகளானதால் அவை பூரணமுள்ளவை" என்கிறார். 3. **தேர்த்துல்லியான்** என்பவர் வேத எழுத்துகளில் ஒன்றைக் கூட்டுவோருக்கும் அதிலிருந்து ஒன்றைக் குறைப்போருக்கும், "ஐயோ என்பது குவித்துவைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார். 4. **அதனாசியஸ்** என்பவர் "பழைய ஏற்பாட்டு ஆகமங்களையல்லாமல், கனோன் அட்டவணைக்குட்படாத வேறுபல புஸ்தகங்களுமிருக்கின்றன. அவை ஞானஸ்நானம் பெறாதவர்களுக்கு வாசிக்கப்படுகின்றன" என்கிறார். 5. **சிப்பிரியான்** என்பவர் "பாரம்பரைகள் எங்கிருந்து வந்தது? அது இயேசுவினிடத்திலிருந்தும் அவருடைய சுவிசேஷத்திலிருந்தும் வந்ததா, அல்லது அவருடைய அப்போஸ்தலரிடத்திலிருந்தும், அவர்கள் நிருபங்களிலிருந்தும் வந்ததா? என்கிறார்.

## 7. பழைய ஏற்பாடு.

தேவனுக்கும் மனுஷருக்கும் 1. ஒரே மத்தியஸ்தராயிருக்கிற 2. தேவனும் மனுஷனுமாகிய கிறிஸ்துவினாலே நித்திய ஜீவனை அடையலாமென்று பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அறிவித்திருக்கிறபடியால் 3. பழைய ஏற்பாட்டுக்குப் புதிய ஏற்பாடு விரோதமானதல்ல. ஆதலால் பழைய ஏற்பாட்டில் சொல்லிய முற்பிதாக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம்

செய்ப்பட்டவைகள் 4. இம்மைக்கு மாத்திரம் உரியவைகள் என்று நம்பினதாகச் சொல்லுகிற வீண் பேச்சை ஒப்புக்கொள்ளக்கூடாது. மோசே மூலமாய் அருளிய பிரமாணங்களில் 5. சடங்குப் பிரமாணத்தை நிறைவேற்ற கிறிஸ்தவர்கள் கடமையுள்ளவர்களல்ல; அவைகளிலுள்ள 6. துரைத்தனப் பிரமாணங்களை எந்த இராச்சியத்திலாவது ஏற்றுக்கொள்வதும் அவசியமல்ல ஆகிலும் அவைகளிலுள்ள 7. சன்மார்க்கப் பிரமாணம் என்னப்பட்ட கற்பனைகளின்படி நடக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டிருக்கிறான்.

## ஒத்து வாக்கியங்கள்.

1. **ஒரே மத்தியஸ்தராயிருக்கிற** "தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோ. 2: 5, 6.) அவர் "புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். (எபி. 9: 15.) "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1 யோ. 2: 1.)

2. **தேவனும் மனுஷனுமாகிய கிறிஸ்து.** இதற்குரிய வேத வாக்கியங்கள் 2-ம் பிரமாணத்து ஒத்துவாக்கியம் 8-ம் குறிப்பில் அடங்கியிருக்கிறது, அதைப் பார்க்கவும்.

3. **பழைய ஏற்பாட்டுக்குப் புதிய ஏற்பாடு விரோதமானதல்ல.** "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்." (எபி. 1: 1, 2.) "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும்



வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கென்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கென்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே." (கலா. 3: 16.) "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால் என்னையும் விசுவாசிப்பீர்கள் அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே." (யோவா 5: 46.) மேலும் அப். 3: 25; லூக். 24: 44; மத். 5: 17, 18; கலா. 3: 24. பார்.

4. **பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களின் நம்பிக்கை.** "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" (யோவா. 8: 56.) "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக்கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளுமென்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்."... அவர்கள் "அதிலும்மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்." (எபி. 11: 13-16) மேலும். 35—வச.

5. **"சடங்குக்குப் பிரமாணம் கிறிஸ்தவர்களைக் கட்டுகிறதில்லை.** நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருந்தது; விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்தியாயருக்குக் கீழானவர்களல்லவே." (கலா. 3: 24, 25.) நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். (கலா. 5: 1.) எபி. 7: 12; கொலோ. 2: 16, 17. பார்.

6. **துரைத்தனப்பிரமாணம் சர்வராச்சியப்பிரமாணமல்ல.** "பவுல் நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன் அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கவேண்டியது" (அப். 25: 10.) "எந்த மனுஷனும் மேலான அதி

காரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். (ரோ. 13: 11 மேலும். 1 பேது. 2: 13, 14. பார்.

7. சந்மார்க்கப்பிரமாணம் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் கட்டுகிறது. விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே? (ரோ. 3: 31.) ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான். கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும், நன்மையாயுமிருக்கிறது" (ரோ. 7: 12.) மேலும் 1 கொ. 7: 19; யாக். 2: 8-11; மத். 7: 17-20. பார்.

## குறிப்புகள்.

1. மொத்தப்பொருள். (1.) பழையேற்பாட்டுக்கு புதியேற்பாடு விரோதமானதல்ல. (2.) பழையேற்பாட்டு முற்பிதாக்கள் [illegible]ளுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள் இம்மைக்கும [illegible]திரம் உரியவைகளென்று எண்ணவில்லை. (3.) யூதமார்க்க சடங்குப்பிரமாணங்களும், துரைத்தனப்பிரமாணங்களும் கிறிஸ்தவர்களைக் கட்டுகிறதில்லை. (4.) யூதமார்க்க சந்மார்க்கப்பிரமாணம் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் கட்டுகிறதாயிருக்கிறது.

2. பழையேற்பாட்டுக்கு புதியேற்பாடு விரோதமானதல்ல. இதை ரூபிக்கும் நியாயமாக பிரமாணத்தில் "ஒரே மத்தியஸ்தராயிருக்கிற தேவனும் மனுஷனுமாகிய கிறிஸ்துவினாலே நித்திய ஜீவனை அடையலாமென்று பழையேற்பாட்டிலும் அறிவித்திருக்கிறபடியால் பழையேற்பாட்டுக்குப் புதியேற்பாடு விரோதமானதல்ல" வென்று கண்டிருக்கிறது. (1.) நம்முடைய இரட்சகர் "நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள் நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்; வானமும், பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" என்று சொல்லியிருக்கிறார். (மத். 5 : 17, 18.) ஆதலால் பழையேற்பாட்டுக்குப் புதியேற்பாடு விரோதமானதல்ல. (2.) இரு ஏற்பாடுகளும் ஒன்றையொன்று விரோதிக்காமல் ஒன்றையொன்று உறுதிப்படுத்தி நிலைநிறுத்துகின்றது. (3.) பரி. பவுல் நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மையின் நிழலாய் மாத்திரமிருந்தது என்கிறார் எபி. 10 : 1. (4.) இரு ஏற்பாடுகளும் இயேசு கிறிஸ்துவின் ஒரே பலியினாலே சர்வலோகத்தின் பாவநிவர்த்தி யுண்டாகிறதென்று தெளிவாய்ப் போதிக்கிறது. (5.) பழையஏற்பாட்டில் தீர்க்கதரிசனங்களாலும், முன்குறிப்புகளாலும் வருகிறார் என்று உணர்த்தப்பட்ட இரட்சகர் புதியேற்பாட்டில் வந்துவிட்டார் என்று உணர்த்துகிறதோடு அவர் தாம் வந்து நிறைவேற்றவேண்டிய சகல கிரியைகளையும் முடித்துவிட்டார் என்று வெளிப்படுத்துகிறது. ஆதலால் இரு ஏற்பாடுகளும் ஒரே தெய்வீக ஏற்பாடாயிருக்கின்றன.



பழையேற்பாட்டில் கிறிஸ்துவைக்குறித்துச் சொல்லப்பட்டதும், புதியேற்பாட்டில் கிறிஸ்துவில் சரியாய் நிறைவேறினதாகவும் வருகிற இரு ஏற்பாட்டின் குறிப்புகளை அடியில் காட்டுவது மேற்சொல்லிய சத்தியத்தைப் பரிஷ்காரமாய் விளக்கலாம். பின்வரும் குறிப்புகளின் அட்டவணை அதற்கு உதவியாகும்.

| பழையேற்பாட்டுக் குறிப்புகள். | ஒத்துவாக்கியம். | புதியேற்பாட்டு நிறைவேறுதல். | ஒத்துவாக்கியம். |
|---|---|---|---|
| ஒரு ஸ்திரீயின் வித்துத்தோன்ற வேண்டியது | ஆதி. 3 : 15. | காலம் நிறைவேறினபோது அந்த வித்துத்தோன்றினார் | கலா. 4 : 4. |
| சகல வம்சமும் அவரால் ஆசீர்வதிக்கப்படும் | ஆதி. 12 : 3. | கிறிஸ்துவில் சகல வம்சமும் ஆசீர்வதிக்கப்பட்டது | கலா. 3 : 8. |
| மோசே, எழும்புவதாய்ச் சொல்லும் ஆள் | உபா. 18 : 15. | அந்த ஆள் கிறிஸ்துவே | யோவா. 1 : 45. |
| பிலேயாம் குறிப்பித்த நட்சத்திரம் | எண். 24 : 14. | அந்த நட்சத்திரம் கிறிஸ்துவே | வெளி. 22 : 16. |
| இரண்டாம் சங்கீதம் குறிக்கும் குமாரன் | சங். 2 : 7. | அந்தக் குமாரன் கிறிஸ்துவே | எபி. 1 : 5. |
| அவர் சிங்காசனம் என்றென்றும் இருக்கும் | சங். 45 : 6. | அது கிறிஸ்துவின் சிங்காசனமே | எபி. 1 : 8. |
| அவர் மெல்கிசேதக்கின் வண்ணமான ஆசாரியர் | சங். 110 : 6. | அந்த ஆசாரியர் கிறிஸ்துவே | எபி. 5: 6; 1:20. |
| ஏசாயா 11-ம் அதிகாரத்தில் குறிக்கப்படுகிறவர் | ஏசா. 11 1-10. | அவர் கிறிஸ்துவே அப். 13 : 23; மத். 3 : 16; வெளி. 11 : 11. | ரோ. 15 : 12. |
| அவர் யூத அதிகாரம் முற்றிலும் ஒயுமுன் வரவேண்டும் | ஆதி. 49 : 10. | கிறிஸ்து யூத ஆசாரியரால் விசாரிக்கப்பட்டார். | மத். 26. அதி. |



| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் ஆலயம் அழியுமுன் வரவேண்டும் | ஆகா. 2 : 7-9. | கிறிஸ்து அப்படியே வந்தார் | யோ. 2:14-19. |
| அவர் பெத்லெகேமில் பிறக்கவேண்டும் | மீகா. 5 : 1. | இயேசு பெத்லெகேமில் பிறந்தார் | மத். 2: 41-11. |
| அவர் கன்னியிடம் பிறப்பார்; பேர், இம்மானுவேல் | ஏசா. 7 : 14. | இது இயேசு கிறிஸ்துதான் | மத். 1 : 23. |
| அவர் சீஷரில் ஒருவனே அவருக்குச் சத்துரு ஆவான் | சங். 41 : 9. | சீஷன் யூதாசே சத்துருவானான் | மத். 26: 14-17. |
| அவர் முப்பது வெள்ளிக்கு விற்கப்பட்டு, வாரால் அடிபட்டு, துப்பப்பட்டு, விலாவில் குத்தப்பட்டு, காடிகுடித்து நிந்திக்கப்படுவார் | சகரி. 11 : 12, 13; ஏசா. 50: 6; சக. 12 : 10; சங். 69 : 21. | இவையெல்லாம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காண்கிறோம் | மத். 27: 9; மா. 15: 15; 10: 34. யோ. 19 : 34; மத். 27 : 34; லூக். 24 : 51. |
| அவர் கைகளும், கால்களும் உருவக் குத்தப்படும் | சங். 22 : 16. | கிறிஸ்துவின் கைகால்களில் ஆணி கடாவப்பட்டது | மத். 27 : 35. |
| அவர் வஸ்திரம் பங்கிடப்படும் | சங். 22 : 18. | கிறிஸ்துவினுடுப்பு பங்கிடப்பட்டது | லூக். 23 : 34. |
| அவர் ஆத்துமா பாதாளத்தில் விடப்படாது | சங். 16: 9, 10. | கிறிஸ்துவின் ஆத்துமா பாதாளத்தில் விடப்படவில்லை | அப். 2 : 31. |
| அவர் பரமண்டலத்துக்கு எழுந்தருளுவார் | சங். 68 : 18. | கிறிஸ்து அப்படியே எழுந்தருளினார் | லூக். 24 : 51. |
| அவர் பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருவார் | சங். 110: 1. | அப்படி உட்காருகிறவர் கிறிஸ்துவே | மத். 22 : 44. |

**3. பழையேற்பாட்டு முற்பிதாக்களின் நம்பிக்கை.** *அவர்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகள் இம்மைக்குமாத்திரம் உரியவைகள் என்று எண்ணிக்கொண்டதில்லை. அவர்கள் நித்திய ஜீவனைப்பற்றி சுவிசேஷத்தில் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்ட வாசகங்களைப்போலொத்தவைகளை நியாயப்பிரமாணத்திலே காணாதே போனாலும் இம்மைக்குத் தாண்டினதான அநேக வாக்குத்தத்தங்களை நம்பி எதிர்பார்த்தார்களென்பது தெளிவாய் விளங்குகிறது. திருட்டாந்தமாக.*

*a.* **யோபின் அறிக்கை.** *"என் மீட்பர் உயிரோடிருக்கிறாரென்றும் அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பாரென்றும் அறிந்திருக்கிறேன்" யோபு.* 19 : 25, 26.

*b.* *ஏனோக் எலியா ஆகிய* **இருவரும் பரமண்டலத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம்.**

*c.* **ஏனோக்கின் பிரசங்கம்.** *யூதா.* 14 : 15-*வச.*

*d.* **தானியேலின் அறிக்கை.** *பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்," தானி.* 12 : 2.

*e. ஆபிரகாம் கிறிஸ்துவின் நாளைக்காண ஆசையாயிருந்து கண்டு களிகூர்ந்தான் என்ற விஷயம் யோவா.* 8 : 56.

*f. முற்பிதாக்கள் எல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைத் தூரத்திலே கண்டு விசுவாசத்தோடு மரித்தார்கள் என்ற விஷயம். எபி.* 11 : 13, 16.

*g. ஆபிரகாம் அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்குக் காத்திருந்தான் பழையேற்பாட்டு விசுவாசிகள் "சுயதேசத்தை நாடிப் போகிறோமென்று தெரியப்படுத்துகிறார்கள்;" மோசே இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான்; வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி துன்பங்களைச் சகித்தார்கள் என்ற விஷயம்* (*எபி.* 11 : 10, 14, 26, 35.) *ஆகிய இக்குறிப்புகள் எல்லாம் பழையேற்பாட்டு முற்பிதாக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகள் இம்மைக்கே மாத்திரம் உரியவைகளென்று நம்பிக்கொண்டிருக்கவில்லை என்று தெளிவாய் விளக்கும்.*



**4. யூதமார்க்கச் சடங்குப் பிரமாணம்.** *இதின்படிச்செய்ய கிறிஸ்தவர்கள் கடமைப்பட்டவர்களல்ல. ஏனெனில்.*

(1.) *அது கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் உபாத்தியாய் மாத்திர மிருக்கிறது. கலா.* 3 : 24, 25.

(2.) *அது வரப்போகிறவைகளின் நிழல் மாத்திரம் எபி.* 10 : 1.

(3.) *அது அடிமைத்தன நுகத்தடியாயிருந்தது. கலா.* 5: 1.

(4.) *யூதமார்க்க ஆலயம் அழிந்துபோனதே, நம்மை அதின் சடங்குகளிலிருந்து நீக்குகிறதாயிருக்கிறது.*

(5.) *அது கிறிஸ்து சபை ஆசாரங்களைப்போலே சர்வலோக சபைக்குரிய ஆசாரமாயிராமல் ஒரே ஜாதிக்குமாத்திரம் அடுத்ததாகக் கொடுக்கப்பட்டிருந்தது.*

(6.) *பழைய உடன்படிக்கை ஒரு புது உடன்படிக்கையால் மேற்கொள்ளப்படுமென்ற தீர்க்கதரிசனமுண்டு. எரே.* 31 : 31, 32. *மேலும் கலா.* 3 : 24, 25. *ஐ எபி.* 7 : 12, 28. *ஒத்துப்பார்.*

(7.) *அப்போஸ்தலரால், முதலாம் திருச்சபைச் சங்கத்தில், கிறிஸ்தவர்கள் யூதமார்க்கச் சடங்குகளுக்குட்பட்டவர்கள் அல்ல என்று தீர்மானிக்கப்பட்டதோடு, சபைகள் தோறும் பிரசித்தப்படுத்தவும் பட்டது. அப்.* 16-*அதி.*

(8.) *பரி. பவுல் அப்படியே எச்சரிக்கிறார். "ஆகையால் போசனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாட்களையுங் குறித்தாவது*

ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" "அவைகள் வருங் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது" (கொலோ. 2: 16, 17.) இந்த முகாந்தரங்களால் கிறிஸ்தவர்களை யூதமார்க்கச் சடங்குகள் கட்டுகிறதில்லை என்று விளங்கும்.

5. யூதச்சாதியின் நுாைத்தனப் பிரமாணம். இதுவும் சர்வ ஜாதிக்குரிய கட்டளைகளல்ல.

(1.) யூதர் இராச்சியபாரம் இழந்து சிதறடிக்கப்பட்டதும்.

(2.) அந்த ஜாதிக்கே அடுத்ததாய்க் காணப்படுகிற அக்கட்டளைகளின் தன்மையும் இதை நன்றாய் விளக்கும்.

(3.) மேலும் பரி. பவுல் கிறிஸ்துமார்க்கத்தையடைந்தபின் யூதப்பிரமாணங்களின் தீர்ப்புக்குத்தான் அடங்கவேண்டியதிருந்திருக்குமானால் இராயனுக்கு அப்பமிடவேமாட்டார். அப். 25 : 10.

கவனிப்பு. மேலே காட்டிய இருவகைப் பிரமாணங்களில் சில ஏற்பாடுகளை "நித்திய கட்டளை" என்று குறிப்பித்திருக்கிறதால் அக்கட்டளைகளை கிறிஸ்தவர்கள் கைகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. அக்கட்டளைகளில், வனயாத்திரைகாலக் கட்டளைகள் நீங்கலாக, தேசஸ்தாபக காலகட்டளைகளாக வருவன எல்லாம் தலைமுறை தலைமுறைதோறும் கைக்கொள்ளும்படியான நியமங்களாயிருக்கின்றன என்று வேற்றுமைப்படுத்தி காட்டும்படிக்கே அப்படி "நித்திய கட்டளை" என்ற பதம் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டியது.

6. யூதமார்க்க சந்மார்க்கப் பிரமாணங்கள். இதின்படிச் செய்ய ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டிருக்கிறான். சன்மார்க்கப் பிரமாணம் என்பது பத்துகற்பனைகளைக் குறிக்கிறது.



(1.) அது மனுஷருடைய சுபாவ நிலைமைக்கேற்றதாலும்.

(2.) கிறிஸ்துவினால் உறுதியாக்கப் பட்டிருப்பதாலும் மத். 5 : 17-20.

(3.) அதின் கட்டளைகள் புதியேற்பாட்டில் கைக்கொள்ளும்படி உணர்த்தப்பட்டிருப்பதாலும் (யாக். 2: 8-11) நாம் அதைக்கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

7. கொள்கைக்காரர். (1.) மானிக்கியர். (Mani-chees) இவர்கள் மூலகர்த்தாக்கள் இருவர் என்றும் அவர்களில் ஒருவர் புண்ணியத்துக்கும் மற்றவர் பாவத்துக்கும் காரணர் என்றும்; பாவகாரணரால் பழையேற்பாடும், புண்ணியகாரணரால் அதற்கு எதிரிடையான புதியேற்பாடும் உண்டானது என்றும் சொல்லி இரு ஆகமங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதில்லை என்று சாதித்தார்கள்.

இக்கோட்பாட்டுக்குத் தலைவனாகிய மானிக்கியு பார்சுதேசத்தில் பிறந்த ஒரு உயர்குலத்தான், கல்வியில் நிபுணன் கிறிஸ்தவனாகி கி. பி. 270-ல் குருப்பட்டமும் பெற்று; சோராயாஸ்தர், பௌத்தன் இவர்களால் போதிக்கப்பட்ட உபதேசங்களை கிறிஸ்துமார்க்க உபதேசங்களோடுகலந்து எல்லாம் ஒரே மார்க்கமாக போதித்தான். அதினாலே இவன்குருத் தொழிலிலிருந்து தள்ளப்பட்டு, பார்சு இராசாவாகிய சாப்பூர் என்பவனுடைய ஆதரவுக்குள் மேன்மையடைந்திருந்தான். அவன் தன் கோட்பாடுகளில் கிறிஸ்துமார்க்கத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறானென்பதைக் கவனித்த அரசன் அவனை தன் அரமனையிலிருந்து அனுப்பிவிட்டான். அதினாலே அவன் தாத்தாரி, இந்தியா, சீனு முதலிய இடங்களில் சுற்றித்திரிந்து தன் கோட்பாட்டை விதைத்தான். கி. பி. 272-ல் மேற்படி இராசன் இறந்துபோனதால் அவன் திரும்பவும் பார்சிய அரமனைக்கு வந்து, அர்மிஸ்டாஸ் என்னும் புது அரசனுடைய சவரட்சணைக்குள்ளிருந்தான். அவன் ஆளுகை இரண்டு வருஷத்துக்குள் முடிந்து போயிற்று. அவன் மகனாகிய வரேனு (Varanes) என்பவன் துவக்கத்தில் அவன்

மேல் பிரியங்கொண்டிருந்தாலும்; ஜனங்களில் மிச்சமானவர்கள் அவனை அலட்சியம் பண்ணுவதைக்கண்டு; மார்க்க சம்வாதம் செய்யத்தீர்மானித்தான். அந்த சம்வாதத்தில் மானிக்கி என்பவன் தோற்றுப் போனதால் கி. பி. 277-ல் கொலைசெய்யப்பட்டான். இவன் (a) தானேபரிசுத்த ஆவி என்று சாதித்தான். (b.) பார்சியர் வணங்கிவந்த மித்திராஸ் (Mithras) கிறிஸ்துதான் என்றுசொன்னான். (c) ஒளி, இருளின் காரணராகிய இருவரே மூலகாரணர் என்றான். (d.) மரித்துப்போன ஆத்துமாக்கள் தீயையும், ஜலத்தையும் கடந்து சூரியனில் சேருகிறது என்று சொன்னான். (e.) அருந்தபசு செய்வதும் அவன் கோட்பாடுகளில் ஒன்று.

2. அந்திநோமியர். (Antinomians) அந்திநோமியர் என்றால் நியாயப்பிரமாண விரோதிகள் என்றுபொருள்படும். சுவிசேஷ வெளிப்படுத்தலின் காலத்தில் நியாயப்பிரமாணம் அவசியமில்லை என்பதும்; நற்கிரியைகளால் நமது இரட்சிப்புக்கு அநுகூலமும், துர்க்கிரியைகளால் பிரதிகூலமுமில்லை என்பதும்; மனந்திரும்புதலின் போதனைகள் பத்துக்கற்பனைகளிலிருந்தல்ல, சுவிசேஷத்திலிருந்தே போதிக்கப்படவேண்டும் என்பதுமே இவர்கள் விசேஷித்த கோட்பாடுகள்.

இக்கோட்பாடு கி. பி. 1538-ல் வசித்த ஜான். அகிரிக்கோலாவால் ஆரம்பமாயிற்று. இவன் லுத்தருடைய சீஷர்களில் ஒருவன். விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட வேண்டுமென்று லுத்தர் போதித்த போதனையை இவன் தப்பாய் அருத்தப்படுத்திக்கொண்டு, நற்கிரியையாவது, அதைப்பற்றிய போதனைகளாவது அவசியமே இல்லை, எப்படி நடந்தாலும் சரி விசுவாசமே போதும் என்று சொல்லி பழையேற்பாட்டு ஆகமங்களையும், அதிலுள்ள சன்மார்க்கப்பிரமாணங்களையும் தள்ளிப்போட்டான். லுத்தர் தாமே இவன் கோட்பாட்டைக் கண்டித்தார். அவர் மரித்தபின் அவன் அக்கோட்பாடுகளை மறுபடியும் பிரபலப்படுத்தினான்.



இக்கோட்பாடு, குரோம்வெல் (Cromwell) அரசாட்சிகாலத்தில் இங்கிலாந்தில் பிரபலமாகி ஸ்தாபிக்கப்பட்டது. அந்திநோமியருடைய கோட்பாட்டைக்கண்டிக்கவே இந்தப்பிரமாணம் சீர்திருத்தல் காரரால் உண்டுபண்ணப்பட்டது.

பூர்வசாட்சிகள்.

1. பழையேற்பாட்டுக்குப்புதியேற்பாடு விரோதமல்ல (a) இக்னேஷியஸ் யென்பவர். "நாம் தீர்க்கதரிசிகளை நேசிக்கிறோம், ஏனெனில் அவர்களெல்லாரும் சுவிசேஷத்தை பிரசங்கித்து அவரில் (கிறிஸ்து) நம்பி அவருக்கு எதிர்பார்த்திருந்தார்கள்." என்கிறார் (b) அந்தியோகியாப்பட்டணத்து தேயோப்புலு "நியாயப்பிரமாணம்பேசும் நீதியைப்பற்றியவிஷயத்தில் தீர்க்கதரிசிகளும் சுவிசேஷகரும், எழுதிவைத்தவைகள் சரியாய் இணங்கியிருக்கிறது." என்கிறார் (c) ஜஸ்டின் மார்ட்டர். தீர்க்கதரிசிகள் ஆகமத்தில் இயேசுஒருகன்னியிடம் பிறப்பதாயும், நோய்களை குணமாக்குவதாயும், குருசில் அறையப்படுவதாயும், மரிப்பதாயும், மறுபடியும் உயிரோடெழுந்திருப்பதாயும் பரமண்டலத்துக்கு எழுந்துபோவதாயும் சொல்லப்பட்டிருக்கின்றது "என்றும்" நியாயப் பிரமாணமானது முன் அறிவிக்கப்பட்ட சுவிசேஷமாயிராமல் வேறென்ன? சுவிசேஷமானது பின்நிறைவேறுதல் பெற்ற நியாயப்பிரமாணமாயிராமல் வேறென்ன. "என்றும் சொல்லுகிறார்."

2. சடங்குப்பிரமாணம் (a) "நியாயப்பிரமாணம் மோசேயின்காலத்தில் ஆரம்பித்து, கிறிஸ்து அதைநிறைவேற்ற வந்தபொழுது யோவானோடே முடிந்தது" என்று ஐரேனியஸ் சொல்லுகிறார் (b) இக்னேஷியஸ் என்பவர் "இயேசுவை கிறிஸ்துவென்று சொல்லிக்கொண்டு, அதனோடு யூதமார்க்கத்தைச் சேர்த்துக்கொள்ளுவது மதியீனம்" என்கிறார். (c) ஓரிஜன் என்பவர் "முன்காலத்தில் நியாயப்பிரமாணத்தையும் இப்பொழுது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை

யும் தந்த தெய்வசித்தமானது யூதருடைய சடங்கையும், ஆசாரங்களையும், நிலைநிறுத்தும்படிச் சித்தங்கொள்ளாமல் அவர்கள்பட்டணத்தையும், ஆலயத்தையும் அழித்துவிட்டது என்கிறார்."

3. சந்மார்க்கப்பிரமாணம் (a) ஐரேனியஸ் யென்பவர் "இந்தக் காரியங்களெல்லாம் பூர்வ சங்கேதக்கப் பிரமாணங்களை விரோதிப்பதாய் அல்லது அழிப்பதாயிராமல் அவைகளின் நிறைவேறுதலாயும் பூரணப்படுதலாயுமேயிருக்கின்றன" என்கிறார்.

## 8. விசுவாசப்பிரமாணங்கள்மூன்று.

நீசேயா விசுவாசப்பிரமாணமும், அதநாசிவிசுவாசப் பிரமாணமும், அப்போஸ்தலருடையதென்று சொல்லப்படுகிற விசுவாசப்பிரமாணமும் ஆகிய இம்மூன்றும், பரிசுத்த வேதவாக்கியங்களினால் யாதொரு சந்தேகமுமின்றி ரூபிக்கப்படும் ஆகையால் அவைகளைமுற்றும் ஒப்புக்கொண்டு விசுவாசிக்கவேண்டும்.

### ஒத்துவாக்கியங்கள்.

☞ பிதாக்குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய மூவரைப்பற்றிய உபதேசங்களே இந்தப்பிரமாணத்தில் உணர்த்தப்படுகிறபடியால் அதையடுத்த வேதவாக்கியங்களை முதல் ஐந்துபிரமாணங்களின் ஒத்துவாக்கியங்களில் காணலாம். அங்கேகாட்டப்படாத விஷயங்களுக்குமாத்திரம் அடியில் ஒத்துவாக்கியங்கள் சொல்லுவோம்.

1. இரட்சிப்புக்குப்பிதாவை விசுவாசிக்கவேண்டும். "உங்கள்தேவனாகிய கர்த்தரை நம்புங்கள் அப்பொழுது நிலைப்படுவீர்கள்." (20: நாளா. 20: 20.) விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாய் இருப்பது கூடாதகாரியம்; ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவா



சிக்கவேண்டும் "(எபி. 11: 6)" ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது "அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (ரோம. 4: 3.) என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு. (யோவா. 5: 24.)

2. இரட்சிப்புக்கு கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." (அப். 16: 31.) தம்முடைய ஒரேபேறானகுமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, &c. (யோவா. 3, 16) "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்." (18-வச) "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். &c. (யோவா. 11: 25, 26.)" அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்து சாட்சிகொடுக்கிறார்கள். (அப். 10: 43.)

3. இரட்சிப்புக்கு பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் இவருடைய நாமத்தினால் தீட்சைபெறவும் ஆசீர்வாதம் பெறவும் வேண்டியதாகையால் இவரையும் விசுவாசிக்க வேண்டியது அவசியமே மத். 28: 19, மாற். 16: 16, 2; கொ. 13: 14, யூதா. 20: 21, வச. பார். மேலும், 5-ம். பிரமாணத்து ஒத்துவாக்கியங்களையும்பார்.

4. திருச்சபைக்குரிய பொதுவானவிசுவாசம். இரட்சிப்படைய விரும்புகிற எல்லாராலும் பற்றிக் கொள்ளப்படவேண்டும். (அதனாசிவிசு-பிர-ம்) "பிரியமானவர்களே பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்துக்காக நீங்கள் தைரியமாய் போராடவேண்டும் என்று எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாகக் கண்டது." (யூதா. 3: வச.)

5. பொதுவாயிருக்கிற சபை "இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் (மத். 16: 18)" சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாயிருக்கின்றது அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவுமிருக்கிறார் (1. கொ. 12: 12) "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே. 2: 21.) மேலும், கொலோ 1 : 18; 2. தீமோ. 1 : 9, வெளி. 5: 9; எபே. 5. 27 ; மத். 13. 24-30, 47; 48.

6. பரிசுத்தவான்களின் ஐக்கியமுண்டு. "நீங்களோ சீயோன் மலையினிடத்துக்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், &c.................... வந்து சேர்ந்தீர்கள்" (எபி. 12. 22-24) மேலும். எபேசி 4: 4; ரோ. 1: 7; (1. யோ. 1: 3, 7 ; யோவா. 17, 21.

7. பாவமன்னிப்பு உண்டு. சங். 130 : 4, லூக். 24. 47; எபேசி. 1. 7 ; ரோம. 4 : 7, 8 ; 1. யோ. 2 : 1, 2 ; எபி. 9: 22. &c.

8. சரீரம் உயிர்த்தெழுதல் உண்டு. ரோம. 8 : 23; ஏசா. 26. 19 ; 1 கொ. 15 : 52; யோவா. 5: 28. 29; வெளி. 20: 12, 13.

9. நித்திய ஜீவன் உண்டு. யோவா. 3: 16; மத். 13: 43; வெளி. 22: 3. 5 ; மத். 25: 46.

## குறிப்புகள்.

1. அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம். (a) இதுவெகு பூர்வீக முள்ளது. இதிலிருக்கிற அநேகபிரமாணங்களை ஐரேனியஸ், தெர்த்துல்லியான் இக்னேஷியு இவர்கள் நூல்களில் பார்க்கிறோம். இதில் "வானத்தையும் பூமியையும் படைத்த" என்கிறவாசகம் நீசேயாசங்கத்திலும்; பாதாளங்களில் இறங்கினார் "பரிசுத்தவான்களின் ஐக்கியமும் நித்திய ஜீவனும்" என்னும் வாசகங்கள் 5-ம் நூற்றாண்டிலும் சேர்க்கப்பட்டது. (b) இது லத்தீனில் சிம்பொலம் (Symbolum) என்று அழைக்கப்பட்டது. இதற்கு சேர்க்கை என்று அருத்தம். பன்னிரு அப்போஸ்தலரும் ஆளுக்கு ஒருசுலோகமாக சேர்ந்து இதை அமைத்தார்கள் என்றபாரம் பரையினாலோ, பல வேத உபதேசங்கள் இதில் ஒரு கொத்தாய் அமைக்கப்பட்டிருக்கிறதினாலோ இதற்கு சிம்பொலம் என்று பேர்சொல்லப்பட்டது. யுத்தத்துக்குப்போகிறவர்கள் தங்கள் பட்சத்தை அறியும்படியான குறிப்பு மொழிகளும் அஞ்ஞானமார்க்க அந்தரங்கஞானங்களை படிக்கும்படி ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் இன்னாரென்று அறிந்துக்கொள்ளும்படியான குறிப்பு மொழிகளும் பொதுவாக சிம்பொலம் என்றபேரால் வழங்கப்பட்டன. இது முகாந்தரமாக கிறிஸ்துவின் போர்வீரர் இன்னாரென்றும், அதின் இரகசியங்களை ஏற்றுக்கொண்டவர்கள் யாரென்றும் விசுவாசப்பிரமாண அறிக்கை உணர்த்துமாதலால் அந்தப்பேரே இதற்கும் வழங்கப்பட்டிருந்தாலுமிருக்கலாம்.



(c.) இது ஆதியில் ஞானஸ்நானம் பெறும் பொழுது மாத்திரம் சொல்லப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்த அந்தியோகியாவின் கண்காணியாகிய பேதுரு காபியு (Petrus Gaphous) என்பவர் காலமுதல் பொதுவான ஆராதனையில் அறிக்கையிடப்பட்டது உரோமைச் சபை 11-ம் நூற்றாண்டு மட்டும் இதை வெளியரங்கமான ஆராதனையில் அறிக்கையிடாதிருந்தாலும், பிரான்சு இங்கிலாந்து என்னும் தேசங்களிலிருந்த சபைகளில் இது 9-ம் நூற்றாண்டு முதல் பகிரங்கமாய் அறிக்கையிடப்பட்டு வந்தது.

2. நீசேயின் விசுவாசப்பிரமாணம். இது கி. பி. 325-ல் நீசேயாவில் கூடினசங்கத்தாரால் எழுதப்பட்டது. இப்பிரமாணம் "அவருடைய இராச்சியத்துக்கு முடிவில்லை, என்பதோடு முடிந்தது. கி. பி. 381-ல் கொன்ஸ்தாந்திநோபுரியில் கூடின சங்கத்தார் "குமாரனிலிருந்தும் என்கிற வாசகம் தவிர மற்றதையெல்லாம் கூட்டினார்கள். மேற்படி வாசகம்

மாத்திரம் 447-ல் ஸ்பானியாவில் கூடினசங்கத்தாரால் கூட்டப்பட்டது. மேல்திசைச்சபை இந்த வாசகத்தை கி. பி. 883-ல் ஒப்புக்கொண்டாலும் கீழ்திசைச் சபையாகிய கிரேக்கைச்சபை இந்த நாள்மட்டும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை.

3. **அதனாசியுவின் விசுவாசப் பிரமாணம்** (*a*) இது அதனாசி கண்காணியாரால் எழுதப்படாமல் அவர் மரித்தபின்பு எழுதப்பட்டது. அவர் ஆரியுவை எதிர்த்து ஆட்சேபித்த உபதேசப் போக்கின்படி இது எழுதப்பட்டபடியால் அவர் பேரால் வழங்கப்படுகின்றது. இது (கி. பி. 485-ல்) சிசிலித்தீவிலுள்ள தப்பேஸ் நகரத்துக் கண்காணியாகிய விகிலியுவால் (Vigihius) எழுதப்பட்டதாக சிலர் சொல்லுகிறார்கள்! வேறு சிலர் கி. பி. 430-ல் பிரான்ஸ்தேசத்து ஆர்லேபட்டணத்துக் கண்காணியாகிய ஹில்லாரி (Hillary) என்பவரால் எழுதப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

(*b*.) இது 7-ம் நூற்றாண்டின் மத்தியில் பிராஞ்சியசபைகளில் வழங்கப்பட்டு அதின்பின் இங்கிலாந்து சபையில் வழங்கி வந்தது. அமெரிக்காவிலுள்ள எப்பிஸ்கோப்பல் சபை இந்த விசுவாசப்பிரமாணத்தை அங்கிகரிக்கிறதில்லை.

## பூர்வசாட்சி.

சிரில் என்பவர் எழுதிவைத்திருக்கிறபடியுள்ள எருசலேம் சபையின் விசுவாசப்பிரமாணமாவது, "வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும், காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரேதேவனை விசுவாசிக்கிறேன். ஒரே கர்த்தருமாய் தேவனுடைய ஒரேபேறான குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே பிதாவினாலே ஜநிப்பிக்கப்பட்டவர். சகலத்தையும் உண்டாக்கின மெய்யான தேவன். அவர் அவதரித்து மனுஷனானார், சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டார். அவர் மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழுந்



திருந்து பரமண்டலத்துக்கேறி பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர் உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்கும்படி மகிமையோடே திரும்பவருவார், அவருடைய இராஜ்யத்திற்கு முடிவில்லை. தீர்க்கதரிசிகள் உரைத்த தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்குரிய ஒரே ஞானஸ்நானத்தை விசுவாசிக்கிறேன். ஒரேபொதுவான சபையுண்டென்று விசுவாசிக்கிறேன். மாம்ச உயிர்த்தெழுதலும் நித்தியஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

## 9. ஜந்ம பாவம்.

ஆதாம்குற்றம் செய்ததுபோல குற்றம் செய்கிறது ஜன்மபாவமென்று பெலாகியுவின் கொள்கைக்காரர் சொல்லுகிறது வீண் (2) ஆதாமின்சந்ததியில் இயல்பாய்ப் பிறந்த ஒவ்வொருவனுடைய சுபாவத்துக்குமுரிய பழுதும் கேடுமே ஜந்மபாவமாம், (3) அதினாலே மனுஷர் ஆதிநீதியைவிட்டு வெகுதூரம் விலகி (4) தீமைக்கு இயல்பாய் சாய்கிறார்கள், மாம்சம் எப்பொழுதும் ஆவிக்குவிரோதமாய் இச்சிக்கிறது, ஆகையால் இவ்வுலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவனும் ஜந்மபாவமுள்ளவனாயிருப்பதினால் (5) தேவனுடைய கோபத்துக்கும் ஆக்கினைதீர்ப்புக்கும் ஏதுவாயிருக்கிறான். (6) இந்த சுபாபக்கேடு மறுஜந்மம் அடைந்தவர்களிலும் இன்னம் இருக்கிறது. ஆதலால் கிரேக்கைப்பாஷையில் பிரோநீமா சார்க்கோஸ் (Phronema Sarkos) என்றிருக்கிற மாம்சசிந்தையானது (7) தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறது. இந்த வார்த்தைக்கு சிலர் மாம்ச ஞானம் என்றும், சிலர் மாம்ச இன்பம் என்றும் சிலர் மாம்சப் பற்றுவென்றும், சிலர் மாம்ச

இச்சை என்றும் அருந்தம் சொல்லுகிறார்கள், (8) விசுவாச முள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லாதிருந்தும், அப்போஸ்தலன் சொல்லி இருக்கிறபடி (9) அவர்களுக்குள்ளும் இருக்கும் இச்சையானது பாவத்தன்மையுள்ளதாயிருக்கிறது.

ஒத்துவாக்கியங்கள்.

1. ஆதாம்குற்றஞ்செய்தது போல "மரணமானது ஆதாமுதல் மோசேவரைக்கும் ஆதாமின்மீறுதலுக்கொப்பாய் பாவம் செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது"(ரோம. 5: 14.)

2. ஆதாமின் சந்ததியில்.... "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ; ஒருவருமில்லை." (யோபு. 14: 4) "ஸ்திரீயினிடத்தில் பிறந்தமனுஷன் சுத்தமாயிருப்பதெப்படி? "(யோபு. 15: 4)"இதோ நான் துற்குணத்தில் உருவானேன். என்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் "(சங். 51: 5)" மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் "(யோவா. 3: 6.) என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று நான் அறிந்திருக்கிறேன்." (ரோம. 7: 18) மேலும் ரோம. 5: 12; 1 கொரி. 15 11. பார்.

3. மனிதர் ஆதிநீதியைவிட்டு, &c. "மனுஷருடைய அக்கிரம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தம் பொல்லாததே என்றும் கர்த்தர்கண்டார்" (ஆதி. 6: 5) மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது (8. 21) எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் யிருக்கிறது. (எரே. 17: 9) மேலும். ரோம. 3: 10; சங். 45: 1, 3; மத் 15: 18, 19. 1. இரா. 8. 19. பார்.



4. தீமைக்கு இயல்பாய் சாய்கிறார்கள். &c. "இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார் அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்" (பிர. 7: 19) மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. (கலா. 5: 17.)

5. தேவனுடைய கோபத்துக்கும்........ஏதுவாயிருக்கிறான். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோம. 6: 23.) சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். (எபே. 2 3) தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். (கலா. 6: 8.)

6. சுபாவக்கேடு மறுஜந்மம் அடைந்தவர்களிலிருக்கிறது. "உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்; ஆகிலும் என் மனதின்பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களிலிருக்க காண்கிறேன் அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது. (ரோ. 7: 22, 23. "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம்" (எசா. 64: 6,)

7. கீழ்ப்படியாமலிருக்கிறது. "மாம்சசிந்தை தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக் கூடாமலுமிருக்கிறது." (ரோம. 8: 7.)

8. விசுவாசமுள்ளவர்....ஆக்கினைத்தீர்ப்பில்லை. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற். 16: 16) "கிறிஸ்து இயேசுவுக்குள்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை (ரோ. 8: 1) மேலும் யோவா. 5: 24. பார்.

9. அவர்களுக்குள்ளும் இருக்கும் இச்சை, &c. பாவமின்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே நான் அறிந்தேயன்றி

மற்றபடி அறியவில்லை. இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால் இச்சைபாவம் என்று நான் அறியாமலிருப்பேன். (ரோ. 7: 7) "இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைபிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக். 1. 15.)

## குறிப்புகள்.

1. முந்தின பிரமாணங்களின் தொகையும் பிந்தினதின் தொடரும். அங்கிலேய சீர்திருத்தல்காரர் தேவன் உண்டென்ற சத்தியத்தை உறுதிப்படுத்தினபின்பு, கிறிஸ்துவின் இரத்தத்தாலுண்டான மீட்பின் சாமாசாரத்தையும் ஆவியானவரின் சகாயங்களையும் எடுத்துக்காட்டி; அவையெல்லாம், சத்தியமென்பதை உறுதிப்படுத்தும் உரைகல்லாக வேதாகமத்தின் அதிகாரத்தை ஸ்தாபித்து; இரட்சண்ய உபதேசங்களின் அடையடக்கமாகிய மூன்று விசுவாசப் பிரமாணங்களையும் திருச்சபை ஒப்புக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இந்தப்பிரமாணமுதல் 17-ம் பிரமாணமட்டுமுள்ள ஒன்பது பிரமாணங்களில், இம்மட்டும் உணர்த்தப்பட்ட சத்தியங்களின் சார்பாய் உண்டாகும் சில விசேஷித்த உபதேசங்களைப் பற்றிய தீர்மானங்களை ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய அங்கிகாரத்துக்கும் ஏற்றதாக அமைத்துக்காட்டுகிறார்கள். இதில் முதலாவது அவர்கள் உணர்த்தும் விஷயம் ஜந்ம பாவத்தைக் குறித்தே.

2. மொத்தப்பொருள் (1) ஜந்தாம்பாவமாவது என்ன (2) அதிலுள்ளகேடுகள் எவை (3) ஞானஸ்நானம் பெற்றபின்பும் நமக்குள் ஜந்மபாவமுண்டு.

3. ஜந்ம பாவம் ஆவது என்ன (1) ஆதாம்குற்றம் செய்கிறதுபோல குற்றம்செய்கிறது ஜந்ம பாவமாயிராமல், ஆதாமின் சந்ததியின் இயல்பாய்பிறந்த ஒவ்வொருவருடைய சுபாவத்துக்குமுரிய குற்றமும் கேடுமே ஜந்ம பாவமாயிருக்கிறது.



என்று அங்கிலேயசபை தீர்மானிக்கிறது, (2) ஆதாமின் விழுதலினாலே அவன் சந்ததியாருக்குண்டான கேடானது பூர்வ திருச்சபை பிதாக்களால் "பழையபாவம்" "பூர்வகறை" "பொதுச்சாபம்" "பழையவடு" என்னும் பேர்களால் அழைக்கப்பட்டது, அகுஸ்தின் அதை "ஜந்ம பாவம்" என்ற பேரால் முதலாவது அழைந்தார்.

(3) சிலர் ஜந்மபாவமானது ஆதாமின் மூலமாய் இயல்பாய் இறங்கிவந்த கேடாயிராமல் அவன் குற்றம் நமக்கு சாட்டப்படுகிறதையே குறிக்கிறது என்பார்கள்.

4. ஜன்ம பாவக்கேடுகள் (1) ஆதி நீதியை இழந்து போனது. (2) தேவனுக்குத் தூரமானது. (3) தீமைக்கு இயல்பாய்சாருகிறது. (4) மாம்சத்துக்கும் ஆவிக்கும் விரோதமானது. (5) தேவ கோபத்துக்கேதுவானது (6) ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளானது; ஆகிய இவைகளே, பேலாகியரும், சொசினியரும், கீழ்ப்படியாமை யாகிய ஒரே பாவம் தான் ஆதாமின் வழியாய்வந்தது என்கிறார்கள். (பேலாகியருடைய கோட்பாடுகளைப் பின்னால் விபரமாய் குறிப்பிப்போம்.)

ஜந்ம பாவத்தையும் அதின் கேடுகளையும்பற்றி அங்கிலேயசபை போதிக்கும் உபதேசம் யதார்த்தமானது என்பது முன் காட்டிய வேதவாக்கியங்களினால் விளங்குகிறதோடு பாலியரும், பைத்தியகாரரும் சாகிற முகாந்தரத்தாலும் விளங்கும்.

5. ஞான ஸ்நானத்துக்குப் பின்பு ஜந்மபாவமுண்டு இதை வேறுவிதமாய்ச் சொன்னால் ஞானஸ்நானமானது ஜந்ம பாவத்தை சமூலமாய் நாசமாக்குகிறதில்லை. பிரமாணத்தில் முன் பங்கு பேலாகியுவின் கொள்கையைக் கண்டிருக்கிறது போல், "இந்த சுபாபக்கேடு" என்பது முதல் கடைசிவரையுமுள்ள பின் பங்கு உட் ரோமச்சபையின் கோட்பாடுகளைக் கண்டிக்கிறது. (அவர்கள் கோட்பாடுகளைப் பின்னாலே சொல்வோம்.)

பிரமாணத்திலில்லை. "ஜென்மம் அடைந்தவர்கள்" என்பது பத அருத்தப்படி பிரத்தியேக விசுவாசிகளைக் குறிப்பாயாவது, ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லாரையும் பொதுவாயாவது குறிக்கலாம். "நீதிமான் எழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதிமொ. 24: 16) "பாவம் செய்யாத மனுஷனில்லையே" (1 இரா. 8: 46) முதலிய குறிப்புகள் இப்பிரமாணத்தின் பின் பங்கிலுள்ள வாசகங்களை உறுதிப் படுத்துகின்றன.

6. ஜன்ம பாவம் உண்டென்கிற உபதேசத்துக்கு ஆதாரமான வேதவாக்கியங்களாவன (ரோம். 5. 15, 18; ஆதி 6: 5, 12; க. இரா. 8: 46. நீதி 24: 16; பிர. 7: 29; 1. கொ. 15: 22; 2 கொ. 5: 17; எபே. 2: 3; ரோ. 8: 7, 8; மேற்ச்சொல்லிய வசனங்களின் சாரமே அங்கிலேய சீர்திருத்தல் காரர் இந்தப்பிரமாணத்தை எழுதி வைக்கும்படி ஏவினது என்று அறிந்துகொள்ள வேண்டியது.

7. கொள்கைக்காரர். (1.) பெலாகியர் (2.) உரோமைச்சபை. பெலாகியர் இவர்கள் கோட்பாடுகளாவன: (1.) ஆதாம் பாவம் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி மரித்தே போயிருப்பான் (2.) ஆதாமின் பாவக்கேடு அவன் மட்டோடுதான் இருந்தது (3.) இப்பொழுது தான் பிறந்த பிள்ளைகளின் நிலைமையும், ஆதாம் பாவம் செய்யுமுன்னிருந்த நிலைமையும் ஒன்று போலதான். (4.) நியாயப்பிரமாணமும் மனிதரை பரலோக இராச்சியத்துக்குப் பக்குவப்படுத்தினது; சுவிசேஷ வாக்குத்தத்தங்கள் அவ்வளவு, நியாயப்பிரமாணமும் அளித்தது. (5.) பொதுவான உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையாலுண்டாகிறதென்று சொல்லக் கூடாது. (6) நம்முடைய புண்ணியங்களுக்குத் தக்கதாகவே தேவகிருபை அருளப் படுகிறது. (7) ஒவ்வொரு சன்மார்க்க கிரியையும் நடப்பிக்கும்படி இந்தக் கிருபை அருளப்படுகிறதில்லை; அவரவருக்குரிய சுயாதீன சித்தத்தைக் கொண்டு நாம் சன்மார்க்கராய் நடக்கக்கூடும் என்பதே.

இக்கோட்பாடு நாலாம் நூற்றாண்டின் கடைசியில் தோன்றினது. இதின் தலைவனாகிய பெலாகியு, பிரித்தானியாவில் பிறந்து, வெல்ஷ்நாட்டு பங்கூர்மடத்தில் படித்து, சந்நியாசியாகி, பின்பு ஒரு மடாதிபதியானான். அவன் தன் பாலியத்திலே பிரான்சுக்கும், அதன்பின் ரோமைக்கும் போய்தன் சிநேகிதனாகிய செலஸ்தியஸ் என்பவனோடு கூடி அந்தரங்கத்தில் தன் கொள்கையைப் பரப்பினான். கி-பி. 410-ல் கொத்தர் ரோமையைப் பிடிக்கவந்தபோது இவன் சிசிலித்தீவுக்கும், அதின்பின் ஆப்பிரிக்காவுக்கும் போய்தன் கொள்கைகளை விதைத்தான். அவன் தப்பான கொள்கை கண்டு பிடிக்கப்பட்டு (412-ல்) கர்த்தாகோ பட்டணத்தில் கூடினசங்கத்தில் கண்டிக்கப்பட்டது. இக்காலத்தில் ஹிப்போவின் கண்காணியாகிய அகுஸ்தின் பெலாகியுவின் கொள்கையைப்பலமாய் விரோதித்து எழுதினார். அப்பால் அவன் பலஸ்தீனாவுக்குப் போனான். எருசலேமின் கண்காணியாயிருந்த யோவான் அவனை ஆதரித்தான். அவன் எருசலேமில் தன் கோட்பாடுகளைப் பிரபலப் படுத்திப் பலரையும் தன் வசப்படுத்தினான். அச்சமயத்தில் அகுஸ்தின், ஒரோசியஸ் என்ற குருவை எருசலேமுக்கு அனுப்பி அவன் தப்பிதத்தை வெளிப்படுத்தும்படிப் பிரயாசப்பட்டார். அப்படியே ஒரோசியஸ் எருசலேமில் கூடின சங்கத்துக்குமுன் அவன் கோட்பாட்டை எடுத்துக்காட்டியும் அவர்கள் பெலாகியுவுக்கு ஒன்றும் செய்யாதது மாத்திரமல்ல அதற்குச் சில காலத்துக்குப்பின் டையாஸ்போலி (Diospolis) என்னும் பட்டணத்தில் கூடின சங்கத்தார் அவன் கோட்பாடு யதார்த்தமென்றே தீர்மானித்தார்கள்.

இந்தச் சமாசாரம் சோசிமஸ் (Zosimus) பாப்புவுக்கு தெரிவிக்கப் பட்டபோது (கி-பி. 417) அவரும் அவர்கள் கோட்பாடு சரியென்று தீர்த்துவிட்டார் என்றாலும் அகுஸ்தீனும் மற்ற ஆப்பிரிக்கா கண்காணிகளும் தைரியத்தோடு எதிர் எழுதியனுப்பிய நிருபங்களையும், நியாயங்களையும் பாப்புபார்

த்தபின்பு பெலூகியுவை(ம், அவன் தோழன் செலஸ்தீனேயும் பதிதனென்று தீர்ப்பிட்டு. அவருக்குச்செய்துவந்த சகாயங்களை நிறுத்திவிட்டார். அதோடு பிரான்ஸ், இங்கிலாந்து ஆப்பிரிக்காதேசத்து சங்கங்களெல்லாம் அவனைப் பதிதனென்று தீர்ப்பிட்டது.

2. உரோமசபை. இவர்கள் ஜன்மபாவத்தின் தன்மை முற்றிலும் ஞானஸ்நானத்தால் நீங்கிப்போகிறது என்றும் ஞானஸ்நானம் பெற்றபின்பு இருக்கிற சுபாபத்தை பாவச்சுபாபம் என்று அப்போஸ்தலன் சொல்லும்போது அதை ஜன்மபாவமென்று சொல்லக் கூடாதென்றும், அது சரியானபடி பாவமாயிராமல் பாவத்திலிருந்து உண்டாகிறதினால் அப்படி அழைக்கப் படுகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

3. தேவன் தீமைக்குக் காரணராயிருக்கிறார் என்று 2-ம் நூற்றாண்டிலிருந்த புளோரினஸ் (Florinus) என்ற உரோமைக்குரு சாதித்தும்; பாவ புண்ணியங்களுக்கு வெவ்வேறு அதிகாரணர் உண்டு என்று மாணிக்கியர் சாதித்ததும்; மனுஷரின் காரியங்கள் கிரகங்களின் சத்துவால் ஆளப்படுகின்றன என்று பிரிசில்லான் முதலியவர்கள் சாதித்ததும். இந்தப்பிரமாணத்தால் கண்டிக்கப் படுகிறது என்கலாம்.

### பூர்வசாட்சிகள்.

ஜன்மபாவ முண்டு. (1) இரேனஷியஸ் என்பவர், கிறிஸ்துவின் இரத்தம் நம்மை பூர்வதோஷங்களிலிருந்துகழுவுகிறது என்கிறார்; (2.) ஜஸ்டின்மார்ட்டார் "சர்ப்பத்தின் வஞ்சனையில் ஆதாமின் மூலமாய் மரணத்தின் கீழ்விழுந்த மனுஷஜாதி யனைத்தையும் மீட்கும்படி கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்" என்கிறார் (3.) ஜரோமிஸ் என்பவர்; இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரை விசுவாசிப்பதினாலன்றி வேறுவகையாய் மனுஷர் தங்கள் ஆதிவடுவிலிருந்து குணமடையக்கூடாது என்கிறார்.



## 10. சுயாதீனசித்தம்.

ஆதாம் பாவஞ்செய்தது முதல்; மனுஷனானவன் தன் இயல்பான திராணியினாலும் நற் கிரியைகளினாலும் விசுவாசிக்கவும்; தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளவும், தன் மனதைத் திருப்பி தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளக் கூடாத நிலைமைக்கு உட்பட்டிருக்கிறான். ஆகையால் 2. கிறிஸ்துவின் மூலமாக உண்டாகும் தேவனுடைய கிருபை நமக்கு முந்திக்கொண்டு நம்மில் நல்ல சித்தத்தை உண்டாக்கிறது மல்லாமல் நல்ல சித்தம் உண்டானபின்பும், அந்தக் கிருபை நம்மோடேகூடக் கிரியை செய்யாவிட்டால், தேவன் அங்கிகரிக்கத் தக்க பிரியமான கிரியைகளை நாம் செய்வதற்குப் பெலனற்றவர்களா யிருப்போம்.

### ஒத்து வாக்கியங்கள்.

1. மனுஷன் தன் இயல்பான, &c. கூடாத நிலைமைக்கு உட்பட்டிருக்கிறான். மாம்சத்துக் குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமா யிருக்கமாட்டார்கள். ரோ. 8: 8)

"ஜென்மசுபாபமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பயித்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்." (1 கொ. 2: 41) "எங்களால் ஏதாகிலும் ஆகுமென்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியுள்ளவர்களல்ல? எங்களுடைய தகுதி தேவனாலுண்டா யிருக்கிறது" (2 கொரி. 3: 5) "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவா. 51: 5) மேலும், 1 கொரி 12: 3; எரே. 10: 23; 31: 18, 19; நீதி. 16: 1. பார்.

2. தேவனுடைய கிருபை நமக்கு முந்திக்கொண்டு &c. "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால்

"அவன் என்னிடத்தில் வரமாட்டான்" (யோவா. 6: 44) "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்". (பிலி. 2: 13. "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே. 2: 1.) "நான் இருக்கிறது தேவகிருபையினால் இருக்கிறேன், அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (1 கொரி. 15 : 10) மேலும் எசா. 26: 12; எசே. 36: 26, 27; 2 கொ. 4: 6; பிலி. 4: 13. பார்.

1. மோக்ஷப் பொருள். (1.) ஆதிமனுஷனின் விழுதல் முதல் மனுஷன் தானாகவே தேவனை விசுவாசிக்கவும் அவனை நோக்கி வேண்டிக்கொள்ளவும், நற்கிரியை செய்யவும் கூடாதவனாயிருக்கிறதால் அதைச்செய்ய அவனை ஏவும்படி தேவனுடைய கிருபை அவசியம் தேவையாயிருக்கிறது. (2.) தேவ கிருபையானது இரண்டுவிதமாய் மனுஷனை ஏவுகிறது. அது a. நம்மில் நல்ல சித்தத்தை உண்டாக்கிறது. b. நல்ல சித்த முண்டானபின்பு அக்கிருபை நம்மோடு கூடக் கிரியை செய்து வருகிறது.

2. மனுஷனுக்குச் சுயாதீன சித்தமுண்டு. a. இயல்பாய் மனுஷர் செய்யவேண்டிய கிரியைகளைத் தங்கள் இஷ்டப்படியே தெரிந்துக்கொண்டு செய்கிறதை அடிக்கடி பார்க்கிறோம். b. அவரவர் மனம்போனபடித் தெரிந்துக்கொண்டு செய்யும் கிரியையின் புகழ்ச்சியை அல்லது இகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளுது தங்கள் பொறுப்பு என்று ஒத்துக் கொள்ளுகிறதையும் பார்க்கிறோம். c. சிலர் காலாகாலமாய்ச் செய்துவரும் ஆசாரியங்கள் முதலாய் சில தரம் அவர்களால் நீக்கிவிடப் பட்டதைப் பார்க்கிறோம். d. அக்கிரமியம் செய்கிறவர்களுக்குள்ளும் அவ்வாக்கியத்தைப் பற்றிய



பயமும், வெட்கமும் இருக்கப் பெரும்பாலும் பார்க்கிறோம். இவைகளால் மனுஷன் சுயாதீனசித்தமுடையவனென்பது நன்றாய் விளங்குகிறது. இந்தச்சுயாதீன சித்தத்தால் அவன் நன்மையாவது தீமையாவது தெரிந்துகொண்டுசெய்யக் கூடியவனாயிருந்தாலும், ஒன்பதாம் பிரமாணத்தில் கூறியபிரகாரம், ஆதிமனுஷன் பாவம் செய்தது முதல் நன்மையை தெரிந்துகொண்டு செய்யும் வல்லமையை இழந்துபோய் விட்டதால், அவன் தானாகவே தேவனை விசுவாசிக்கவும், பரிசுத்த மார்க்கத்தில் நிலைநிற்கவும் கூடாதவனாயிருக்கிறான்.

3. முந்திக்கொள்ளும் கிருபை. மனுஷனுடைய கூடாமையே தேவகிருபையின் அவசியத்தை உறுதிப்படுத்துகிறது. மனுஷன் தானாய் தேவனிடமாய்த் திரும்ப இயலாதவன் என்பது நிசமானதையால் ஒன்று அவன் அவரைவிட்டு என்றென்றைக்கும் பிரிந்துபோக வேண்டும் அல்லது அவராலேயே அவரிடத்தில் இழுக்கப்பட வேண்டும்; அவர் தமது ஆவியானவரைக் கொண்டு ஏவும் [illegible] பிரமாணத்தில் முந்திக்கொள்ளும் கிருபையென்று கண்டிருக்கிறது. முந்தும் கிருபையைப் பற்றிய திருஷ்டாந்தங்கள். பவுலின் குணப்படுதல், லீதியாளின் மனந்திரும்புதல் இவ்விதகிருபையைப் பற்றி எரே. 31: 18; எசா. 65: 1; ரோம. 10: 20: அப். 16: 14; பிலி. 2: 13; எபே. 2: 10. 2 கொ. 5: 5; எபே. 24; பார்.

4. நம்மோடு கூடிக் கிரியைசெய்யும் கிருபை. துவக்கமே வேறொரு உதவியால் உண்டாகிறது மெய்யானால், பக்தின ஜீவியத்திற்கும் அது அவசியமே.

மனுஷன் தேவனுக்குப் பிரியமாய் நடக்கும்படியாக, அவருடைய கிருபையே முந்திக்கொள்ளவும், பின்தொடரவும் வேண்டும் என்று சொல்லுவதால், அவனுக்கு சுயாதீன சித்தமுண்டென்பதை அது விரோதிக்க மாட்டாது; இயலமாட்டாத மனுஷ இருதயத்தில் கிரியைசெய்யும் தேவகிருபையானது, அவனுக்குரிய சுயாதீனத்துவத்தை அழித்துவிடுகிற

இல்லை. தேவன் நமக்காகவும், நம்மோடும் கிரியை செய் போதிலும் நம்மையல்லாமல் கிரியைசெய்கிறதில்லை. ஆதலா ஒருவன் மனோஉச்சாகமாய் ஒருமனப்பட்டு தன் இரட்சி பைத் தேடிக்கொள்ளப் பிரயாசைப்படாவிட்டால் அவன் தே வனுடைய கிருபையை வீணாய்ப் பெறுகிறவனாகவே யிருப்பான் (2 கொ. 6: 1).

5. கொள்கைக்காரர். (1.) வாலந்தீனியர். (Valentiusn) இவர்களின் தலைவனாகிய வாலந்தீனு "மூன்று வெவ்வேறு விதமான தன்மையுள்ள மனுஷர் ஆதாமுக்குள் சிருஷ்டிக்கப்படுகிறார்கள் என்றும், அத்தன்மைகளுக்கு முறையே மண்ணின் தன்மை, மாம்சதன்மை ஆவியின் தன்மை என்று பேரென்றும், மண்ணின் தன்மைக்கு காயினும், மாம்சதன்மைக்கு ஆபேலும் ஆவியின் தன்மைக்கு சேத்தும் திருஷ்டாந்தங்களாயிருக்கிறார்களென்றும்; அந்தந்தச் சுபாபங்கள் அவரவர் பிறப்புமுதல் அவரவருக்குள் அமைந்திருப்பதால் அச்சுபாபம் அவர்கள் சாவுமட்டும் யாதொரு மாறுதலடைகிறதில்லை என்றும், இதில் முதலாம் சுபாபிகள் அழிவுக்கும், மூன்றாம் சுபாபிகள் மோட்சத்துக்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறார்கள், இரண்டாம் சுபாபிகள் இப்படியோ அப்படியோ என்ற சந்தேகத்திலிருக்கிறது, இவர்கள் முடிவு அவர்கள் மனதின் சாயுதலுக்குத் தக்கதாக இருக்கும் என்றும் சாதிக்கிறார்கள். இக்கோட்பாட்டை அக்காலத்து சபைப்பிதாகளும், விசேஷமாய் ஒரிஜனும் பலமாய் விரோதித்து ஆட்சேபித்தார்கள். (2) பேலாகியர். இவர்கள் கோட்பாட்டைப் பற்றி ஒன்பதாம் பிரமாணத்தில் பார். (3) சேமிபேலாகியர், (Semi—Plagians) அல்லது பாதிபேலாகியர், நாம் மனம்திரும்பும்படி தேவனுடைய முந்திக்கொள்ளும் கிருபை நமக்கு வேண்டியதேயில்லை, ஏனெனில் ஒவ்வொருவரும் தங்கள் சுபாபபலத்தினாலே தேவனிடத்துக்குத் திரும்பலாம்;. ஆனால் தேவ ஆவியின் உதவியில்லாமல் ஒருவரும் பக்தியில் வளரவாவது, முயற்சி செய்யவாவது



கூடாது என்று சாதித்தார்கள். பிரமாணத்தின் கடைசிப்பங்கு இவர்களைக் கண்டிருக்கிறது (4) லுத்தர் மனுஷருக்குச் சுயாதீன சித்தம் என்னப்பட்டது இல்லவே இல்லையென்று சாதித்தார்.

### பூர்வசாட்சிகள்.

1. ஐரேனியஸ் என்பவர் " ஆண்டவருடைய உதவியையும், ஆசீர்வாதத்தையும் பெறாத ஒருவனும் இரட்சணிய வழிவகைகளை அடையவே மாட்டான் என்கிறார்; (2) அலெக்சாந்திரியா கிளமேந்து என்பவர் ஒருவன் தன் மாம்ச இச்சைகளை அடக்கும்படி தானாக முயற்சி செய்கையில் ஒரு லாபத்தையும் கண்டடையான்; ஆனால் அவைகள் அழிந்துபோகும்படியான உண்மையும் விடாமுயர்ச்சியுமுள்ள விருப்பத்தைக் காட்டும்போது; தன் காரியம் சித்தியாகும்படியான தெய்வீக வல்லமையைப் பெற்றுக்கொள்ளுகிறான்; ஏனெனில் தேவன் அப்படிபட்டவர்களுக்கு இரங்கி உதவிசெய்கிறார்" என்கிறார் (3.) சீர்திருந்தல்காரர் ஒருவரும், சுயாதீன சித்தத்தை அழித்து விடுகிறதற் கேதுவாக தேவகிருபையைப் பற்றிப் பிரசங்கிக்கவும்; தேவகிருபையின் மகத்துவம் குறைந்துபோகிறதற் கேதுவாக சுயாதீன சித்தத்தைப் பற்றி உயர்த்திப் பேசவும் கூடாது" என்று தீர்மானித் திருக்கிறார்கள்.

## 11. மனுஷன் நீதிமானாக்கப் படுதல்.

நாம் செய்யும் கிரியைகளினிமித்தமாவது, நம்முடைய புண்ணியங்களின் நிமித்தமாவது நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களென்று எண்ணப்படாமல், விசுவாசத்தினாலே நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தமே நீதிமான்களென்று எண்ணப்படுகிறோம். ஆகையால் நாம் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமான்களாக்கப் ப

டுகிறோம் என்கிற உபதேசம் ஆரோக்கியமும், பூரண ஆறுதலுமுள்ளதாயிருக்கிறது.

மனுஷர்கள் நீதிமான்களாக்கப் படுவதைக்குறித்துச்சொல்லிய ஓமிலி என்னும் பிரசங்கத்தில் இது விபரமாய் காட்டப்பட்டிருக்கிறது.

## ஒத்துவாக்கியங்கள்.

**கிரியைகளினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறதில்லை.** "நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல கிறிஸ்துவைப்பற்றும்." விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்கு கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்தமனிஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. (கலா. 2: 15, 16) "எல்லாரும் பாவம் செய்து தேவமகிமை யற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைகொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோ. 3: 23, 24) "அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" (ரோ. 10: 3) மேலும். சங். 143: 2. பார்.

2. **"நாம் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமான்களாக்கப்படுகிறோம்."** கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபேசி. 2: 8, 9) "மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிற எவனும், அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்" (அப். 13: 39) "நாம்செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது



இரக்கத்தின்படியே......நம்மை இரட்சித்தார்." (தீத். 3: 5.) மேலும் ரோம. 3: 20-25; 2 கொ. 2: 21; எரே. 23: 5, 6; கலா 3: 11, 12; பார். "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." (ரோம. 5: 1.)

## குறிப்புகள்.

1. **மொத்தப் பொருள்.** (1.) நம்முடைய கிரியைகளினிமித்தமாவது, புண்ணியங்களின் நிமித்தமாவது நாம் நீதிமான்களாகிறதில்லை. (2.) இயேசுவின் புண்ணியங்களின் நிமித்தமே நீதிமான்களென்று எண்ணப்படுகிறோம். (3.) இந்த நன்மை விசுவாசத்தினாலே கிடைக்கிறது.

2. **முந்தினவைகளின் சம்பந்தம்.** ஒன்பதாம் பிரமாணத்தில் மனுஷன் தேவநீதியை இழந்துவிட்டான் என்றும்; பத்தாவதில் இழந்துபோன சலாக்கியத்தை அவன் தானாய்ப் பெற்றுக்கொள்ளக் கூடாதவனாயிருக்கிறான் என்றும் காட்டி இதில் அது விசுவாசத்தினாலே இயேசுவின் புண்ணியங்களின் நிமித்தம் அருளப்படுகிறது என்று உணர்த்தியிருக்கிறது.

3. **நீதிமானாக்கப்படுதல்.** என்பது ஆக்கினைத் தீர்ப்பு என்பதின் எதிர்பதமாயிருந்து தேவனுக்கு முன்பாக நீதிமானாக எண்ணப்படுவதைக் குறிக்கிறது; ஒரு பாவியை நீதிமானாகச் செய்விக்கிறது என்கிற கருத்தையல்ல, நீதிமான் என்று அறிக்கையிடுகிறதைக் குறிக்கிறது; இது குற்றமில்லை என்ற முகாந்தரத்தால் நீதிமான் என்று அறிக்கையிடுகிறதைக் குறியாமல், குற்றவாளியாயும் தண்டனைக் குரியவனாயுமிருந்தும், தேவ ஆவியினாலே தண்டனைக்கு நீங்கிப் போகிறதைக் குறிக்கிறது. இது (1.) நம்மை ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து நீக்குகிறது. யோவா. 5: 24; ரோ. 8: 1 (2) நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் இதைச் சம்பாதிக்கலாகாது. அப். 13. 39;

ரோ. 3: 20; 8. 3; கலா. 2: 16; 3. 11; எபி. 7: 19; 3. (வேறெந்தக் கருமங்களினாலும் இது கிட்டாது யோபு.) 9: 2, 25. 4; சங் 130; 143. 2. (4) அது தேவ கிருபையினால் நமக்கு அருளப்படுகிறது. ரோ. 3: 24; 4. 4; எபே 2, 8; 1 தீமோ. 1: 9; தீத். 3: 5; (5) கிறிஸ்துவின் புண்ணியத்தாலும் திரு இரத்தத்தாலும் கிடைக்கிறது. அப். 13: 38; ரோ. 5: 9, 19; (6) விசுவாசத்தினாலே அது கிடைக்கிறது. ரோம. 3: 22; கலா. 2. 16; 3. 11, 24; எபே. 2: 8; எபி. 10: 38; 11. 7; (7) கிறிஸ்துநாதர் நியாயப்பிரமாணத்தைச் சரிவர நிறைவேற்றி தேவ நீதியைத் திருப்திப்படுத்தினதால் அது நீதியாய் கிடைக்கவேண்டியதுதான். ஏசா. 42. 21; ரோ. 3. 24-26; (8) ஒருதரம் நீதிமானாகப்பட்டது பின்பு மாற்றப்படமாட்டாது. ரோ. 8. 30-39.

4. விசுவாசத்தினாலே......இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தியமே நீதிமான்கள் என்று எண்ணப்படுகிறோம் என்பது நற்கருணை ஒழுங்கின் பின்பங்கில், "பரமபிதாவாகிய கர்த்தாவே" என்னும் ஜெபத்தில் "உம்முடைய குமாரனாகிய" என்பது முதல் "தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம்" என்பதுவரையுமுள்ள வார்த்தைகளுக்கு இசைவாய் இருக்கிறது என்று சொல்லவேண்டியது.

5. நீதிமானாக்கப்படுதலைக்குறித்து பரி பவுலும், பரி. யாக்கோபும் சொல்லியிருப்பது ஒன்றுக்கொன்று விகர்ப்பமில்லை (1.) பரி பவுல் நாம் தேவனுக்கு முன்பாக இரட்சிப்புக்கேற்ற நீதிமானாக எண்ணப்படுவதைப் பற்றிப் பேசுகிறார், ரோ. 3. 26. பரி யாக்கோபோ மனுஷருக்கு முன்பாக சாதாரணமாய் நமது விசுவாசம் அங்கிகாரம் ஆவதைப்பற்றிப் பேசுகிறார். யாக் 2, 18. (2.) பரி பவுல் விசுவாசமார்க்கத்துக்குள்படாதவர்களைப் பற்றிப் பேசுகிறார் பரி யாக்கோபோ அதற்குள்பட்டவர்களைப் பற்றிப் பேசுகிறார். ரோ. 4. 5; 5: 6, 8, 10 ஐயும் யாக். 2. 14, 21, 22யும் ஒத்துப்பார்) (3.) பரி பவுலின் போதனைகள் தப்பாய் அருத்தம் பண்ணப்பட்டு எவ்வித கிரியையும் பற்றி அக்கரையில்லை விசுவாசமே போ



என்று பலர் எண்ணிக்கொண்டிருந்ததை நிராகரிக்கவே பரி. யாக்கோபு கிரியைகளைப்பற்றி அப்படி உயர்த்திப் பேச நேரிட்டது. (4) பவுல் உயிருள்ள விசுவாசத்தைப்பற்றி மாத்திரம் பேசுகிறார் அது தன் இயல்பில் கிரியைகலந்ததாகவே இருக்கும், பரி. யாக்கோபோ பிசாசுகளுக்குமிருக்கப்பட்ட செத்த விசுவாசத்தைப்பற்றிப் பேசுகிறார், அது நற்கிரியை கலந்திருக்கமாட்டாது.

6. கிறிஸ்துவின் புண்ணியங்கள் பாவிகளுக்கு சாட்டப்பட்டு அவர்கள் நீதிமான்களாக எண்ணப்படுகிறார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிச் சாட்டப்படுகிறதைப்பற்றி வேதத்தில் யாதொரு குறிப்புமில்லை; அவர்களுடைய விசுவாசமே அவர்களுக்கு நீதியாக எண்ணப்படுகிறதென்று வாசிக்கிறோம். (ரோம. 4: 3-6.) லூத்தர் என்பவர், மனுஷரின் பாவங்கள் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவின புண்ணியங்கள் மனுஷருக்கும் சாட்டப்படுகிறதே நீதிமானாக்கப்படுதல் என்றும், கிரியையால் பூரணப்பட்ட விசுவாசமல்ல தனி விசுவாசமே மனுஷனை நீதிமானாக்குகிறது என்றும் போதித்தார். இதுவும் சரியான போதனையல்ல.

7. நீதிமானாக்கப்படுதலைப்பற்றி திரெண்ட சங்கத்தார் 16. பிரமாணங்களைத் தீர்மானம் செய்தார்கள். அவைகளில் சிலவற்றின் பொருள் பின்வருமாறு: (2) யூதர் புறச்சாதியார் இருவரையும் மீட்கும்படி தேவன் தமது குமாரனை அனுப்பினார். (3) அவர் எல்லாருக்காகவும் மரித்தபோதிலும், அவருடைய புண்ணியங்கள் எவர்களுக்கு செலுத்தலாகிறதோ அவர்களோ அந்தப் பாக்கியத்தை அநுபவிக்கிறார்கள். (4) பாவிகள் நீதிமான்களாகிறார்கள் என்பது அவர்கள் ஆதாமின் மக்கள் என்ற நிலைமைமாறி தேவ புத்திரர் என்ற நிலைமைக்குள் படுகிறதையே குறிக்கிறது, சுவிசேஷகாலமுதல் அந்நிலைமை ஞானஸ்நானத்துமன்றி உண்டாகிறதில்லை. (5) பருவங் கடந்தவர்களின் நீதிமானாகுதல் முந்திக்கொள்ளும் கிரு

யையினால் ஆரம்பிக்கிறது. (7) நீதிமானாக்குதல் என்பது பாவ மன்னிப்பையும், பரிசுத்தவானாகுதலையும் குறிக்கிறது.

8. வித்தியாசம். நீதிமானாகுதலுக்கும் பரிசுத்தவானாகுதலுக்குமுள்ள வித்தியாசங்கள். (1) நீதிமானாக்குதல், தேவனை நியாயாதிபதியாகப் பாவித்து அவருடைய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து பாவியைத் தப்புவிக்கிறதாயும்; பரிசுத்தவானாக்குதல் அவரை பிதாவாகப் பாவித்து நமது இருதயத்தையும், ஜீவியத்தையும் மாற்றிச் சுத்திகரிக்கிறதாயுமிருக்கிறது (2) நீதிமானாக்குதல் பயிரின் ஆரம்பம் போலும் பரிசுத்தவானாகுதல் பயிரின் பலன்போலும் இருக்கிறது. (3) நீதிமானாக்குதல் ஒரேகாலத்தில் அடங்கி ஒரேமட்டாயிருக்கிற நிலைமையும்; பரிசுத்தவானாகுதல் வளரும் தன்மையுள்ளதாயுமிருக்கிறது. (4) நீதிமானாக்குதல் நமது பாவத்தை நீக்குதலாயும், பரிசுத்தவானாக்குதல் அதின் வல்லமை அழித்துவிடுகிறதாயுமிருக்கிறது. (5) நீதிமானாக்குதல் தேவகோபத்திலிருந்து நம்மை தப்புவிக்கிறதாயும், பரிசுத்தவானாக்குதல் அவருடைய சாயலை நம்மில் பதியவைக்கிறதாயுமிருக்கிறது.

9. இந்த உபதேசம் ஆரோக்கியமும் பரிபூரண ஆறுதலுமுள்ளது. (1) இது தேவனுடைய பரிபூரணத்தையும், ஆருகையையும் மகத்துவமானதாக்குகிறது. சங். 85: 10; ரோ. 3: 26. (2) இது பாவியைத் தாழ்த்தி பாவநாசனை உயர்த்துகிறதாயிருக்கிறது. ரோ. 3: 27; வெளி. 1: 5, 6. (3) மனுஷர் எல்லாரையும் ஒரே நிலைமையில் நிறுத்தி இரட்சிப்பை சர்வலோகத்துக்கும் பொதுவாக்குகிறது. ரோம. 3: 30; 10: 12; கொலோ. 3: 11. (4) இது விசுவாசிகளின் நம்பிக்கையை நிச்சயமும் நித்தியமுமான ஒரு அஸ்திபாரத்தின் மேல் ஊன்ற கட்டச்செய்கிறது. ரோ. 8: 30—34.

10. ஓமிலி என்னும் பிரசங்கம்: "மனுஷர்கள் நீதிமான்களாக்கப்படுவதைக் குறித்து" என்றபேரால் யாதொரு பிரசங்கமும் ஓமிலி என்னும் பிரசங்கத் திரட்டில் இல்லை; ஆதலால் இப்பிரமாணத்தில் வரும் குறிப்பு "சகல மனுஷருடைய இரட்சிப்பையும்பற்றி" என்னும் பேரால் வழங்கும் ஓமிலி முதலாம் புஸ்தகம் மூன்றாம் பிரசங்கத்தையே குறிக்கிறதென்று எல்லாராலும் எண்ணப்படுகிறது. மேலும் இந்த விஷயம் அதற்கு அடுத்த இரண்டு பிரசங்கங்களிலும் குறிப்பாய் காட்டப்பட்டிருக்கிறது.



### பூர்வ சாட்சிகள்.

1. ரோமாபுரி கிளெமெந்து என்பவர் "கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய சித்தத்தினாலே அழைக்கப்பட்ட நாம், நம்மாலாவது, நமது ஞானத்தாலாவது, அறிவினாலாவது பக்தியினாலாவது நாம் நமது சுத்த இருதயத்தோடு செய்து வரும் கிரியைகளினாலாவது நீதிமான்களாக்கப்படாமல், உலகதோற்றமுதற்கொண்டு சர்வவல்லமையுள்ள தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் நீதிமான்களான விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்படுகிறோம்" என்கிறார்.

2. போலிக்கார்ப்பு என்பவர் "நீங்கள் கிரியைகளினால் அல்ல, தேவனுடைய சித்தத்தின்படியே கிருபையினால், இயேசுவின் மூலமாய் இரட்சிக்கப்பட்டீர்கள்" என்கிறார்.

3. சிப்பிரியான் என்பவர் "ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தத்தில் கிறிஸ்தவர்களுக்கும் பங்குண்டு; எப்படியெனில் ஆபிரகாம் விசுவாசித்து அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது மெய்யானால், அப்படியே விசுவாசித்துப் பிழைக்கிறவன் எவனோ அவனும் நீதிமான் என்று காணப்படுவான்" என்கிறார்.

## 12. நற்கிரியைகள்.

விசுவாசத்தின் கனிகளாயும் நீதிமான்களான பின்பு செய்யப்படுகிறவைகளாயுமிருக்கிற நற்கிரியைகள், 2 நம்முடைய பாவங்களைப் பரிகரிக்கவும், தேவனுடைய கண்டிப்பான நியாயத்தீர்ப்பைத் தாங்கவும் கூடாதவைகளாயிருந்தும், 3 கிறிஸ்துவின் மூலமாய் அவை

கள் தேவனுக்குப் பிரியமானவைகளாயும், அங்கிகரிக்கத்தக்கவைகளாயுமிருக்கிறது. அன்றியும் அவைகள் 4 உண்மையும் உயிருமுள்ள விசுவாசத்தினாலே இயல்பாய் உண்டாகிற பலன். எப்படியெனில் மரத்தின் தன்மையை கனியினால் அறிகிறதுபோல 5 உயிருள்ள விசுவாசத்தை நற்கிரியைகளினாலே தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

### ஒத்த வாக்கியங்கள்.

1. நீதிமான்களான பின்பு செய்யப்படும் நற்கிரியைகள். "நீங்கள் மிகுந்தகனிகளைக் கொடுக்கிறதினால் என் பிதா மகிமைப்படுவார். (யோவா. 15: 8.) விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்; ஒருவன், உனக்கு விசுவாசமுண்டு எனக்கு கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை காண்பி நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. (யாக். 2: 17, 18) இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் முடிவோ நித்திய ஜீவன். (ரோ. 6 : 22) நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபே. 2: 10.) மேலும் தீத். 3: 8; கலா. 5: 5; கொலோ. 1: 10. பார்.

2. நற்கிரியைகள் நமது பாவங்களைப் பரிக்கவும் கூடாது, தேவனுடைய நியாயத்தீர்ப்பைத் தாங்கவும் கூடாது.—நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு நாங்கள் அப்பிரயோசனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள். (லூக். 17 : 10) பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுகிறதில்லை. (ரோ. 3 : 20.)



3. கிறிஸ்துவின் மூலயாய் அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகள்—நன்மைசெய்யும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள், இப்படிபட்ட பலிகளின் மேல்தேவன் பிரியமாயிருக்கிறார். எபி. (13 : 16) மனுஷர் உங்கள்பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. (மத் 5 : 16).

4. நற்கிரியைகள் உயிருள்ள விசுவாசத்தின் இயல்பான பலன். ஆவியின்கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடிய பொறுமை, தயவு நற்குணம் விசுவாசம், சாந்தம் இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலா. 5:22' 23) நீங்கள் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே, இச்சையடக்கத்தையும் இச்சையடக்கத்தோடே பொறுமையையும் பொறுமையோடே தேவபக்தியும் தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும்; சகோதர சிநேகத்தோடே அன்பையுங்கூட்டி வழங்குங்கள். (2 பேது. 1 : 5—7).

5. உயிருள்ள விசுவாசத்தை நற்கிரியையால் அறியலாம். நல்ல மரமெல்லாம் நல்லகனிகளைக் கொடுக்கும். கெட்ட மரமோ கெட்டகனிகளைக்கொடுக்கும் ......அவரவருடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். (மத்தே. 7 : 17—20) மேலும் சங். 1 : 1—4 பார்.

### குறிப்புகள்.

1. நோக்கம். இத்தப்பிரமாணம் 1552-ம் வருஷத்துப் பிரமாணங்களில் இல்லாதிருந்தாலும் 1562-ல் பாரக்கர் அதிமேற்றிராணியால் சேர்க்கப்பட்டது. இது சீர்திருத்தலின் காலத்தில் எழும்பி நற்கிரியைகளின் அவசியத்தை மறுத்த அந்தி

நோமியர் சோலிபிதியர், (Solifidous) காஸ்பெல்லர் (Gos-pellers) முதலியவர்களின் எண்ணத்தை தவிர்க்கவும் நற்கிரியையைப்பற்றிய அங்கிலேயசபையின் தீர்மானத்தை வெளியிடவும் நோக்கமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

2. எந்த நற்கிரியை விசுவாசத்தின் பலனும், நீதிமான்களானபின்பு செய்யப்பட்டதாயுமிருக்குமோ அந்த நற்கிரியை கிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்குப் பிரியமானதாயிருக்கிறது என்பதே அங்கிலேய சபையின் தீர்மானம். அப்படிப்பட்ட நற்கிரியையின் தன்மையாவன. (1) அது தேவமகிமையைக் கருதினதாகவேயிருக்கும். க கொ. 10: 31. பிலி. 1: 10, 11. (2) அது தேவனாலேயே ஆரம்பிக்கப்படும். பிலி. 2: 13. (3) கிறிஸ்துவில் நிலைத்திருப்பதினாலே அது விருத்தியாகும். யோவா 15: 4, 5. (4) அது அந்தரங்க விசுவாசத்தின் தன்மையை விளக்கும். மத். 7: 17.

3. கொள்கைக்காரர். அந்திநோமியர், சோலிபிதியர், காஸ்பெல்லர், உரோமைச்சபை இதில் அந்திநோமியரைப்பற்றி 7-ம் பிரமாணம் 2-ம் நம்பர் கொள்கையார்.

4 ரோமச்சபை. இவ்வுலகமுறைப்படி மனுஷர் தங்கள் நற்கிரியைகளினாலே தேவனுடைய பிரமாணத்தை சரிவரதிர்ப்பதிசெய்யக் கூடியவர்களானதால் அவர்கள் நற்கிரியைகளே நித்தியஜீவனை சம்பாதிக்கத்தக்க புண்ணியமுள்ளவைகள் என்றும் பாவமன்னிப்பைப்பெற்ற பரிசுத்தவான்களின் கிரியைகள் பூரணநற்கிரியைகளானதால் அவை புண்ணியமுள்ளவைகளென்றும் சொல்லுகிறார்கள்.

### பூர்வசாட்சிகள்.

1. ரோமாபுரி கிளேமேந்து என்பவர் "ஆபிரகாம் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தின்படியால் விசுவாசி என்று காணப்பட்டான் என்கிறார். இக்னேஷியஸ். தேவனை சேரும்படி விசுவாசம் வழிகாட்டியும், அன்பு வழியும் போலிருக்கிறது" என்கிறார் ஜஸ்டின் மார்ட்டர் கிறிஸ்து தம்மை



அறிக்கையிடுகிறதினால் மாத்திரம் இரட்சிப்புண்டு என்று சொல்லாமல், அவருடைய கட்டளையின்படி செய்கிறவர்களுக்கே இரட்சிப்பு என்று சொன்னார் என்கிறார்.

## 13. நீதிமான்களாக்கப்படு முன் செய்யும் கிரியைகள்.

கிறிஸ்துவின் கிருபையையும், அவருடைய ஆவியின் ஏவுதலையும் அடைவதற்குமுன்னே மனுஷர் செய்யும் கிரியைகள் இயேசுகிறிஸ்துவைப்பற்றும், விசுவாசத்தால் உண்டானவைகளாயிராததினால், 1 தேவனுக்குப் பிரியமானவைகளுமல்ல. அவைகள் 2 கிருபையைப் பெறுவதற்கு மனுஷரைப் பாத்திரவான்களாக்குகிறதும் அல்ல, அல்லது சில கல்விமான்கள் சொல்லியபடி அவைகள் 3 கிருபையைப் பலனாகப் பெறத்தகுதியானவைகளுமல்ல; மேலும் அவைகள் தேவனுடையசித்தத்தின்படியும் கட்டளையின்படியும் செய்யப்படாதவைகளானதால் அவைகள் 4 பாவத்தன்மையுள்ளவைகளென்பதற்குச்சந்தேகமில்லை.

### ஒத்துவாக்கியங்கள்.

1. முந்தின நிலைமையின் கிரியைகள் தேவனுக்குப் பிரியமானதல்ல. கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. ரோ. (8: 9.) விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். (எபி. 11: 6) மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். (ரோ.8: 8.

2. அவைகள் கிருபையைப் பெருவதற்கு மனுஷரைப் பாத்திரவான்களாக்குகிறதுமில்லை. "கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள்; நானே திராட்சச்செடி நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக்கொடுப்பான்.' (யோவா. 15: 4, 5.) நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் மறுஜன்ம முழுக்கினாலும்........இரட்சித்தார். (தீத். 3. 5.)

3. அவைகள் கிருபையைப் பலனாகப் பெறத்தகுதியானவைகளல்ல. விரும்புகிறவனாலுமல்ல ஓடுகிறவனாலுமல்ல இரங்குகிற தேவனாலேயாம். (ரோம. 9: 16) வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச்செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள். (கொலோ. 3. 17).

4. அவைகள் பாவத்தன்மையுள்ளவைகள். "விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே. ரோம. 14. 23.

## குறிப்புகள்.

1. முந்தின பிரமாணத்தில் நீதிமான்களானபின்பு செய்யப்படும் நற்கிரியைகள் முதலாய் தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட தன்னிலே பூரணசுத்தமுள்ளதல்லாதபடியால், கிறிஸ்துவின் மூலமாய் அவைகள் தேவனுக்குப் பிரியமானதாயும் அங்கிகரிக்கத்தக்கவைகளாயுமிருக்கிறது என்று சொல்லி இந்தப்பிரமாணத்தினால், அதற்கு முந்திச்செய்யும் கிரியைகள் தேவனால் அங்கிகரிக்கப்படத்தக்கவைகளல்ல என்று அங்கிலேயசபை தீர்மானிக்கிறது.



2. கல்விமான்கள். பதினோராம் நூற்றாண்டுமுதல் 14-ம் நூற்றாண்டுமட்டுமிருந்த பல சர்வகலாசாலைத்தலைவர் வேதசாஸ்திரங்களின் பல உபதேசங்களை தீர்மானிக்கிறதுபோல புதுவார்த்தைகளையும், வாசகங்களையும் பல உபதேசங்களின் அவையடக்கம்போல போதித்தும், எழுதியும் வந்தார்கள். அதை பொதுவாக "கலைக்கியானிகளின் வேதசாஸ்திரம்" (Schoolastic Theology) என்று அழைக்கப்பட்டது. பல உபதேச விஷயங்களில் அவர்கள் அமைத்த சில விசேஷித்த பதங்களே கிறிஸ்து சபைகளில் இப்பொழுதிருக்கிற பல விபரீத அபிப்பிராயங்களுக்கும், பிரிவினைகளுக்கும் மூலம் என்று சொல்லலாம்.

அவர்கள் தேவகிருபையை மனுஷர் பெற்றுக்கொள்ளும் தகுதியை இரண்டுவகைப்படுத்தி அதற்கு வெவ்வேறு பேரிட்டுப் போதித்தார்கள். அவை (Grace of Congruit) இயல்புக்கிருபை (Grace of Condignity) கடமைக்கிருபை என்று அழைக்கப்படுகின்றன. (Grace of Congruit) இயல்புக்கிருபை என்பது. மனுஷர் தங்கள் இயல்பான பாவஸ்வபாவத்திலும் அவிசுவாசத்திலுமிருந்தபோதிலும், சன்மார்க்கநிலையின் புண்ணியங்களுக்குத் தகுதியுடையவர்களாகத்தக்க ஒருபடியில் தங்கள் முயற்சியால் தாங்களாகவே வரத்தக்கவர்களாயிருக்கிறார்கள், அந்தப்படியில் அவர்கள் வரும்போது தேவன் பரோபகாரமாய்த் தமது கிருபையைப் பலனாக அருளுகிறார் என்னும் அபிப்பிராயத்தை விளக்கும்பதமாயிருக்கிறது.

கடமைக்கிருபை என்பது (Grace of Condignity) இயல்புக்கிருபையின் நிலைக்கு ஒருவன் வந்தபின்பு அவனுக்கு அருளப்படும் தொடர்ச்சியான கிருபைகளை தேவன் அருளுகிறார், அதினால் அவன் பூரணபுண்ணியங்களின் பாத்தியத்துக்குத் தகுதியுடையவனாகையால் தேவன் நித்தியஜீவனை அவனுக்கு அளிக்கக்கடமைப்பட்டவராகிறார் என்னும் கருத்தை விளக்கும் பதமாக இருக்கிறது. இவ்விருகருத்துகளும் இந்தப்பிரமாணத்தால் கண்டிக்கப்படுகிறது.

3. கோள்கைக்காரர் 1. பேலாகியர். இவர்களைக் குறித்தும் 9-ம் பிரமாணமுதல் பார். 2. கல்விமான்கள் (மேலே சொல்லியவைகளைப் பார்.

### பூர்வசாட்சிகள்.

பூர்வசபைப் பிதாக்கள் மத்தியகாலத்துக் கல்விமான்களின் கருத்துக்கு விரோதமாகவும், பிரமாணத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிற சத்தியத்துக்கும் சார்பாகவுமே சாட்சி பகருகிறார்கள்.

இக்னேஷியஸ் என்பவர், "மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரியவைகளைச் செய்யவேகூடாது: அப்படியே அவ்விசுவாசிகள், விசுவாசிகளுக்குரிய கிரியைகளைச் செய்யவுங்கூடாது" என்கிறார். ஐரேனியஸ் என்பவர் "காட்டொலிவு நல்ல ஒலிவோடு ஒட்டவைக்கப்படாவிட்டால், அதின் சொந்தக்காரனுக்கு யாதொரு லாபமுமற்றதுபோல ஒரு மனுஷன் விசுவாசத்தினால் ஆவியானவரோடு ஐக்கியமாகாத பட்சத்தில், முன்போலவே, தேவனுடைய இராட்சியத்தைச் சுதந்தரிக்கமாட்டாமல் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமிருக்கிறான்" என்கிறார்.

கிறிசொஸ்தம்என்பவர்; "நீங்கள் மெய்விசுவாசிகளாகாமலும், கிறிஸ்துவின் மந்தைக் குட்படாமலுமிருக்கிற அனந்தம் பேரைப்பார்க்கலாம்; அவர்கள் இரக்கத்தின் கிரியைகளால் நிறைந்து, அநுதாபசெய்கையாலும், தயாளத்தாலும், நீதியாலும், அடர்ந்திருக்கலாம், இவ்வளவுமிருந்தபோதிலும், அவர்கள் கிரியைகளின் பலன் ஒன்றும் அவர்களிடத்தில் இல்லை, ஏனெனில் பிரதானமான கிரியை அவர்களில் இன்னும் பாக்கியாயிருக்கிறது" என்கிறார்.

## 14. மிச்சப்புண்ணியக் கிரியைகள்.

தேவன் கட்டளையிட்டதற்கு 1 அதிகமாக சுதாவாய்ச் செய்கிற கிரியைகள் மிச்சப்புண்ணியக்கிரியைக



ளாம். இப்படிச்செய்யக்கூடுமென்று போதிக்கிறது அகங்காரமாயும், அவபக்தியாயுமிருக்கிறது. அவைகளைச் செய்தோமென்கிறவர்கள், தேவனுக்குச்செய்ய வேண்டிய கடமையைத் தாங்கள் சரியாய் நிறைவேற்றினதுமல்லாமல், கட்டளையிட்டிருக்கிற கடமையிலும் அதிகமாய் அவருக்காகச் செய்தோம் என்கிறவர்களாயிருக்கிறார்கள். 2 கிறிஸ்துவோ: உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு, நாங்கள் அப்பிரயோசனமான ஊழியக்காரர் என்று சொல்லுங்கள் என்று தெளிவாய்ப் போதித்திருக்கிறார்.

### ஒத்துவாக்கியங்கள்.

1. அதிகமாக சுதாவாய்ச் செய்கிற கிரியைகள். "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத். 15 : 9.) "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல. ஆகையால் போசனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும், ஓய்வுநாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரம் முழுவதையும் ஆதரிக்கிற தலையைப்பற்றிக் கொள்ளாமல் மாயமான தாழ்மையிலும், தேவதூதருக்குச்செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை

நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். (கொலோ. 2: 8, 16—19.)

2. கிறிஸ்துவோ மி "தான் கட்டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்ததற்காக அவனுக்கு உபசாரம் செய்வானோ? அப்படிச்செய்யமாட்டானே; அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு நாங்கள் அப்பிரயோசனமான ஊழியக்காரர் செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோமென்று சொல்லுங்கள் என்றார். (லூக். 17 : 9, 10) மேலும் யோபு. 22 : 2, 3; 35: 7; அக். 18 : 10-14. பார்.

## குறிப்புகள்.

1. மிச்சப் புண்ணியம் என்பது அதின் மூலக்கருத்தின்படி கடனுக்குமிஞ்சிக் கட்டின தொகை என்று பொருள் தரும். மிச்சப்புண்ணியக்கிரியை என்று ரோமானித்தார் சொல்லுவது, ஒருவன் தன் சுய இரட்சிப்புக்காக என்னென்ன நற்கிரியை செய்யவேண்டியதுண்டோ அவ்வளவும் செய்கிறதோடு, அதற்கு மிஞ்சின அளவாய் மற்றவர்களுடைய இரட்சிப்பின் பாக்கிக்கும் உதவத்தக்கதான அதிக கிரியைகளையும் குறிக்கிறது.

2. உபதேச ஆரம்பம் பூர்வ யூதர் நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளை இரண்டாக வகுத்து அவைகளில் சில பாரம் உள்ளவைகளும் சில இலேசு உள்ளவைகளென்றும் சொல்லி இவ்வண்ணம் தேவனுடைய கட்டளைகளை அவமாக்கிவிட்டது போல * உரோமச்சபையும் சுவிசேஷத்தில் கட்டளைகளாய் வரும் பாகத்தை ஆலோசனைகளாய் வரும் பாகத்திலிருந்து வகுத்துவிட்டு, அவைகளுக்கு முறையே இரட்சிப்பின் சட்டங்கள், இரட்சிப்பின் ஆலோசனைகள் என்று பேரிட்டிருக்கிறார்கள். இதில் இரட்சிப்பின் சட்டங்களின்படி மாத்திரம் நடந்தால் அதால் பூரண இரட்சிப்பு அவனுக்குண்டு என்றும், அதற்கு ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்



என்றும்; ஆலோசனைகள் என்னப்படுகிற பாகத்தையும் யார் யார் கூட நிறைவேற்றி வருகிறார்களோ அவர்கள் தங்கள் இரட்சிப்புக்கு மிச்சமானதைச் செய்துவருகிறதால், அது மற்றவர்களுக்கு உதவும்படி மிச்சமாயிருக்கிறது என்றும் சாதிக்கிறார்கள்.

3. இந்த உபதேசத்தின் வேத ஆதாரமாக ரோமானித்தார் சொல்லும் வாசகங்களில் ஒன்று 1 கொ. 7 : 26, 28. இந்த வசனத்தைக்கொண்டு அவர்கள் விவாகம் பண்ணாமலிருப்பது மிச்சப்புண்ணியமாகிறது என்கிறார்கள். இது அக்காலத்துக்கும், சமையத்திற்கும் தக்கதாகச் சொல்லப்பட்டதேயன்றி பொதுவான இரட்சண்ய ஆலோசனைக்குரிய நியமமல்ல.

4. மேலும் அவர்கள், மனுஷருடைய இரட்சிப்புக்கு அவசியமானதற்கு மிஞ்சின மீட்பை கிறிஸ்து சம்பாதித்தார் என்றும்; பரிசுத்தவான்கள் தங்கள் இரட்சிப்புக்கு மிஞ்சினதான புண்ணியக்கிரியைகளைச் சம்பாதித்து இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

இந்த மிச்சப்புண்ணியப் பொக்கிஷத்துக்கு பாப்பு அதிபதியாம்; அவர் அனுப்பும் பரிபூரணபலனாலும், விற்கும் பாவமன்னிப்புச்சீட்டுகளாலும் அது பங்கிடப்படுகிறதாம்.

5. இது வேத உபதேசமல்ல. மத். 5 : 48; லூக். 17 10; 2 கொ. 7 : 1. மேலே சொல்லிய வசனங்களைப்பார்.

மேலும் ஒருவனுடையதிலிருந்து எடுத்துச் செலுத்தத்தக்கதான புண்ணியம் இல்லவேயில்லை. திருஷ்டாந்தமாகப் பத்துக் கன்னியாஸ்திரிகளின் உவமை. (மத். 25 : 9) மேலும் சங்கீதக்காரன் "ஒருவனாவது தன் சகோதரன் அழிவைக் காணாமல், இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி. எவ்விதத்திலாவது அவனை மீட்டுக்கொள்ளவும் அவன் நிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே" என்கிறான். சங். 49 : 8, 9.

6. தன்னைத்தான் தாழ்த்தவேண்டும் என்கிற சுவிசேஷக
ட்டளையை விரோதிக்கிறதால் இது அஙங்காரமான போதனை
யாயும், கிறிஸ்துவின் நிறைவும், பூரணமும் போக்தமான
பலியையும், காணிக்கையையும் பரிகாரத்தையும் மட்டுப்படுத்து
கிறதோடுகூட, தெளிவான வேதவசனங்களுக்கு விரோதமா
யிருக்கிறதால் இது அவபக்தியின் போதனையாயுமிருக்கிற

### பூர்வசாட்சி.

1. பேசில் என்பவர் "தன் சுயபாவத்துக்காக தேவனு
க்குத் திருப்திசெய்ய இயலாதவன் மற்றவனுடைய பாவத்து
க்காக அவரை எப்படித்திருப்திசெய்யக்கூடும்" என்கிறா
சிப்பிரியான் என்பவர் "எவனும் தான் செய்கிற கிரியைகளை
க்கொண்டு தன்னை உயர்த்திக்கொள்ளக்கூடாது" என்கிறா
ஜஸ்ற்றின் மாட்டர் என்பவர் "கிறிஸ்து நமக்காக மரித்த
னல் இரத்தசாட்சிகளின் இரத்தம், அவன் சகோதரரின் பா
மன்னிப்புக்காகச் சிந்தப்படுகிறதில்லை" என்கிறார்.

## 15. கிறிஸ்து ஒருவரே பாவம் இல்லாதவ

நம்முடைய 1 தன்மையை மெய்யாய்த் தரித்து
கொண்ட கிறிஸ்து பாவம்தவிர மற்றெல்லாவற்றிலு
நமக்கு ஒப்பானவரானார். 2. சரீரத்திலும் ஆத்துமா
த்திலும் அவர் முற்றும் பாவம் இல்லாதவர். 3 அவ
மாசில்லாத ஆட்டுக்குட்டியாகத் 4 தம்மைத்தாமே ஒரே
தரம் பலியிட்டு உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்
வந்தார். பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறபடி அ
வரிடத்தில் பாவமில்லை. நாமோ ஞானஸ்நானம்பெற்
கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்களாயிருந்து
5 அநேக விஷயங்களில் தவறுகிறோம்; 6 நமக்கு
பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கி
றவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.



### ஒத்துவாக்கியங்கள்.

1. நம்முடைய தன்மையை மெய்யாய்த்தரித்துக் கொண்ட கிறிஸ்து மி. "பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபி 2 : 14) அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்திசெய்வதற்கேதுவாக தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும், உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. (எபி 2. 17.)

2. சரீரத்திலும் ஆத்துமத்திலும் அவர் பாவமில்லாதவர். "இந்த உலகத்தின் அதிபதிவருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. (யோவா. 14 : 30) அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயிலேவஞ்சனை காணப்படவுமில்லை. (1பேது. 2 : 22.) அவரிடத்தில் பாவமில்லை (க யோ. 3 : 5) மேலும் எபி. 7. 27 ; யோவா. 8 : 46. பார்.

3. அவர் மாசில்லாத ஆட்டுக்குட்டி. "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி. (யோவா. 1. 29).

4. தம்மைத் தாமே ஒரேதரம் பலியிட்டு மி. "அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். (எபி. 9 : 26) "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (க பே. 1 : 19, 11. 18, 19.)

5. நாம் அநேக விஷயங்களில் தவறுகிறோம். "நாமெல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். (யாக. 3 : 2.) வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்து

பபோட்டது (கலா. 3 : 22) மேலும் ரோ. 3 : 10 ; பிரச. 7 : 20 பார்.

6. **நமக்குப்பாவமில்லை யென்போமானால்.** "நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் சத்தியம் நமக்குள் இராது" (1 யோ 1. 8.)

## குறிப்புகள்.

1. **மொத்தப்பொருள்** (1) கிறிஸ்துவுக்கு அணுவளவு பாவம் இருந்ததேயில்லை ; ஆகலால் அவருடைய பிராயச்சித்தப் பலி சர்வலோக ரட்சிப்பைப் பூரணப்படுத்தத் தகுந்தது. (2) நாம் மறுபிறப்படைந்தபின்பும் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறோம், ஆதலால் நமக்கு சுயபுண்ணியமுமில்லை. என்பதே.

2. **பேதம்.** கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள பேதம் பாவமே. கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே பாவமில்லாமல் உற்பவித்துப்பிறந்தார். பாவமானது மாம்சதன்மையைச் சேர்ந்த ஒரு பங்காயிராமல் மாம்ச தேகியின் விழுதலின் ஒரு பலனாய் மாத்திரமிருக்கிறது ; கிறிஸ்து நமது தன்மையில் பங்குபெற்றதினாலே நமது விழுதலிலும் பங்குபெற்றாரென்று சொல்லக்கூடாது.

3. நாம் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பும் பாவம் செய்கிறோம் ; நோவா, யோபு, சகரியா முதலியவர்களை நீதிமான்கள் என்று சொல்லுவது ; அவர்கள் தேவனுடைய பிரமாணங்களின் வழியில் நடக்கும்படி முயலுகிறவர்களாயிருந்தார்கள் என்று காட்டும் பொதுவான உலகநடையேயன்றி வேறல்ல ; மேலும் அவர்கள் தங்கள் காலத்திலிருந்த மற்றவர்களிலும் உத்தமர் என்பதைக் காட்டுகிறதேயன்றி, தேவனுடைய பரிசுத்தத்தின்படியான நீதிமான்களாயிருந்தார்கள் என்று குறிக்கிறதில்லை.



4. **கொள்கைக்காரர்.** பெலாகியரும், சொசனியரும் கிறிஸ்து மனுஷதன்மைக்குரிய பாவச் சுபாபமுடையவராயிருந்தார் என்று சாதித்துவந்தார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கண்டிக்கவே இந்தப் பிரமாணம் அமைக்கப்பட்டதென்று தோன்றுகிறது. மரியம்மாள் ஜந்மபாவமில்லாமல் உற்பவித்தாள் என்னும் உரோமைக் கொள்கையும் இதினால் கண்டிக்கப்படுகிறது.

## பூர்வசாட்சிகள்.

**ஜஸ்டின் மார்ட்டர்.** "கிறிஸ்து ஒருவரே கடிந்துகொள்ளுதலுக்குட்படாதவர்" என்கிறார். **ஐரேனியஸ்.** "கிறிஸ்து பாவஞ்செய்யாமலிருந்ததே நமக்கும் அவருக்குமிருந்த வித்தியாசம் என்கிறார். **அலெக்சாந்திரியா கிளேமெந்து** "வார்த்தை என்பவரே பாவமற்றிருக்கிறவர்" என்கிறார்.

# 16. ஞானஸ்நானத்துக்குப் பின்பு செய்யும் பாவம்.

ஞானஸ்நானம் பெற்றபின்பு மனதாரச் செய்யும் மரணத்துக்கு ஏதுவான ஒவ்வொரு பாவமும் 1 பரிசுத்த ஆவிக்கு விரோதமான மன்னிக்கப்படாதபாவம் அல்ல. ஆகையால் ஞானஸ்நானம்பெற்ற பின்பு பாவத்தைச் செய்தவர்கள் மனந்திரும்பி மன்னிப்புப் பெறுவதற்கு இடமில்லை என்று தீர்க்கக்கூடாது; நாம் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்பும் நமக்கு அருளின 2 கிருபையை விட்டு விலகி பாவத்தில் விழுகிறதுமுண்டு, 3 திரும்பவும் தேவகிருபையினாலே எழுந்திருந்து சீர்ப்படுகிறதும் உண்டு. ஆதலால் 4 நாங்கள் இம்மையில் இருக்குமளவும் பாவம்செய்யக்கூடிய

வர்கள் அல்ல என்று சொல்லுகிறவர்களும், உண்மையாய்க் குணப்படுகிறவர்களுக்கு பாவமன்னிப்பு இல்லை என்று சொல்லுகிறவர்களும் தப்பிதமான கொள்கைக்காரர் என்று தீர்க்கவேண்டும்.

ஒத்துவாக்கியங்கள்.

1. **பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்.** "எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும், ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ, மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும், எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. (மத். 12 · 31, 32.) மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு. (1,யோ 5 : 17) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். (1 யோ 1· 9) மேலும் 2: 6—8. பார்.

2. **ஞானஸ்நானம் பெற்றபின்பும் பாவத்தில் விழுகிறதுண்டு.** நீங்கள் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையிலிருந்து விழுந்தீர்கள். (கலா. 5. 4.)

3. **திரும்பவும் சேர்ப்படுகிறதுமுண்டு.** திருஷ்டாந்தரம் பேதுரு அப்போஸ்தலன்.

4. சகோதரரே ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடு அப்படிப்பட்டவனை சீர்பொருந்தப் பண்ணுங்கள். (கலா. 6: 1.)



குறிப்புகள்.

1. **மோத்தப் போதன்.** (1) ஞானஸ்நானம்பெற்ற பின்பும் மனுஷன் மரணத்துக்கேதுவான பாவத்தில் மனதார விழுவான் (2) அந்த நிலைமையிலிருந்தும் அவன் மனந்திரும்பி மன்னிப்பைப் பெறக்கூடும். (3) பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமின்னது.

2. **மரணத்துக் கேதுவான பாவம்.** உரோமைச்சபை கர்மப்பாவங்களை இருபங்காய்ப் பிரித்து, அதில் பொய், வஞ்சனை, கோபம், ஆணையிடுதல் முதலிய பாவங்கள் சோற்ப பாவம் என்றும், இவைகள் தேவ இஷ்டப்பிரசாதத்தைக் குறைத்து நம்மை உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் பாத்திரவான்களாக்குகிறதென்றும், விபசாரம், கொலை, விக்கிரகாராதனை முதலியவைகள் சாவானபாவம் என்றும் இவைகள் தேவ இஷ்டபிரசாதத்தைப் போக்கடித்து நம்மை நரகத்துக்குப் பாத்திரவான்களாக்குகிறதென்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கருத்துக்கு இசைவாக அங்கிலேயசபையானது, "மரணத்துக்கேதுவான பாவம்" என்னும் பதத்தை வழங்குகிறதில்லை; தேவனுக்கு முன்பாக எல்லாப்பாவங்களும் ஒன்றுபோலவே எண்ணப்படுகிறது. ஞானஸ்நானம் பெற்றபின்பு ஒரு கிறிஸ்தவன் அறிந்தும், துணிந்தும் செய்யும் பல பாவங்களுக்கு இதை ஒரு பொதுப்பேராய் வழங்கியிருக்கிறதேயன்றி வேறல்ல. மேலும் பாவங்கள், வேதத்தில் சில விசேஷித்த பேர்களால் உணர்த்திக் காட்டப்படுகின்றன. திருஷ்டாந்தரமாக "மறைவான குற்றங்கள்," துணிகரமான பாவங்கள் (சங். 19 : 7-12) "மரணத்துக்கேதுவான பாவங்கள்" மரணத்துக்கேதுவல்லாத பாவங்கள் (1 யோ. 5: 16) இப்பிரிவுகள் பாவங்களின் தன்மையையாவது தண்டனையையாவது வகுத்துக் காட்டுகிறதில்லை.

3. **மன்னிக்கப்படமாட்டாத பாவம் எது?** மனதாரச்செய்யும் மரணத்துக்கேதுவான பாவமெல்லாம் பரிசுத்த ஆவியி

ன் நடத்துதலுக்கு விரோதமானதால் அவைகளை பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமென்று சொல்லலாமானாலும், அவைகள் மன்னிக்கப்படமாட்டாத பாவங்கள் என்று சொல்லக்கூடாது; பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் மன்னிக்கப்பட மாட்டாதென்று இரட்சகர் சொல்லாமல் அவருக்கு விரோதமான தூஷணம் மன்னிக்கப்படமாட்டாதென்றார். இந்த தூஷணமாவதென்ன? இயேசுவின் அற்புதங்கள் பிசாசின் வல்லமையினால் செய்யப்பட்டவைகள் என்று சொல்வதே? இப்பொழுதும் யார், யார் கிறிஸ்துவின் அற்புதத்தைக்குறித்து அப்படிச்சொல்லுவார்களோ அவர்கள் பழைய பரிசேயரைப்போல பரிசுத்த ஆவியைத் தூஷிக்கிறவர்கள் என்று சொல்லவேண்டியது.

4. பலபோதனைகள். ஞானஸ்நானத்துக்குப் பின்பு செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படுவதைப்பற்றி-பலர் பலவித அபிப்பிராயங்களைச் சொன்னதுண்டு. பாசிலிதஸ் (Basilides) என்பவன் "எல்லாப் பாவங்களுமல்ல, முன் ஆயத்தமில்லாமலும், அறிவீனத்தினாலும் செய்த பாவங்கள் மாத்திரம் மன்னிக்கப்படும்" என்று போதித்தான். மொந்தானியர் (Moutanists) விசேஷ பாவங்களினால் சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களை ஒரு தடவைக்குமேல் சேர்க்கிறதேயில்லை. ஓரிஜன் என்பவர் ஒருதரம் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்து ஞானஸ்நானம் பெற்ற ஒருவன் மறுதலித்தால், அவனைத் திரும்ப சேர்க்கவும் கூடாது, அவனுக்கு பாவமன்னிப்பும் இல்லை என்று போதித்தார். நோவேற்றியர் (Novatians) இப்படியே போதித்தார்கள் இவர்கள் கோட்பாடுகளெல்லாம் திருச்சபையில் கண்டிக்கப்பட்டது.

5. சீர்திருத்தலின் காலத்தில் அனபாப்திஸ்தர் என்று பொதுவாக அழைக்கப்பட்ட பல பிரிவார், பூர்வ தோனத்தியரின் கோட்பாடுகளைப் பிடித்துக்கொண்டு ஞானஸ்நானத்திற்குப்பின்புபாவத்தில் விழுகிறவன் தான் இழந்த நிலைமை



யை மறுபடியும் கண்டடைகிறதில்லை என்று சொல்லிசாதித்தார்கள். ஆனால் இயேசுவை மறுதலித்த பேதுருவின் குணப்படுதல் அவர்கள் கோட்பாட்டை நிராகரிக்கும் உதாரணம் போலிருக்கிறது.

6. இங்கிலாந்தில் ஆம்பட்டன் சங்கம் (Hampton Court Conferences) கூடின போது பியூரிற்றன்ஸ் (Purit-ons) எனப்பட்டவர்கள் கல்வின் (Calvin) என்பவர் போதனையைப் பிடித்துக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றவர்கள் மனதார பாவத்தில் விழமாட்டார்கள் என்கிறகருத்தை இப்பிரமாணத்தில் உறுதிபடுத்தக்கருதி "பாவத்தில் விழுகிறதுமுண்டு" என்பதற்குப்பின்பு ஆனால் முற்றிலுமாயல்ல என்னும் வாசகத்தைக் கூட்டமுயன்றார்கள், அவர் பிரயத்தனம் பலிக்கவில்லை.

7. கல்வீன போதனை. இதைப்பற்றிய கல்வீனர் போதனையாவது:—"ஒருதரம்கொடுக்கப்பட்ட கிருபைகுறைவுள்ளதாகிறதேயில்லை; நாம் ஒருதரம் கிறிஸ்துவுக்குள்ளானால் தப்பிக்கொண்டோம்; கிறிஸ்துவிலிருந்து விழுந்துபோகிறவர்கள் மெய்யான முன் குறித்தலையுடையவர்களாயிராமல் வெளியரங்கமான அடையாளங்களைமாத்திரமுடையவர்களாயிருக்கிறார்கள்" என்றார்.

8. ஞானஸ்நானம் பெற்றபின்பு செய்யும் பாவத்துக்கு மன்னிப்பு இல்லை என்று சொல்லக்கூடாது விருத்தசேதனத்தினால் நியாயப்பிரமாணத்திற்குட்பட்டவர்களின் பாவமன்னிப்பின் நிச்சயம் அன்றாடபலிகளினாலும், பல நியமங்களினாலும் உணர்த்தப்பட்டன என்கலாம்; அப்படிப்பட்ட சலாக்கியம் ஞானஸ்நானத்தினால் கிருபையின் உடன்படிக்கைக் குட்பட்டவர்களுக்கு இல்லையென்று எப்படிச்சொல்லலாம் (2) எசே. 38: 12-16 வரையுமுள்ள வசனங்களின் கருத்து இதற்கு ஆதாரமாயிருக்கிறது (3) நியாயப் பிரமாணத்துக்குட்பட்டிருந்த மோசே தாவீதுமுதலியவர்களின் பட்சமாவது சாபமாவது கொலையாவது விபசாரமாவது அவர்களின் பாவ

மன்னிப்பை முற்றிலுமாய் அற்றுபோகச்செய்யவில்லையென்று பார்க்கிறோம் ஞானஸ்நானம் பெற்றபின்பு பாவம்செய்தால் அவர்களுக்கு மன்னிப்பு இல்லையென்றால் யோசேக்குள்பட்டவர்களுக்கு இருந்தசிலாக்கியம் இவ்வளவு கிறிஸ்துவுக்குள் பட்டவர்களுக்கு இல்லையென்று சொல்லுகிறதுபோலாகும். (4) பரமண்டல ஜெபத்தில் இரட்சகர் "எங்களுக்கு விரோதமாய்க்குற்றம்......எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்றுசொல்லும்படி படிப்பித்துத் தந்தவாசகம் ஞானஸ்நானம் பெற்றபின்பு அவர்கள்செய்யும் பாவத்துக்கு மன்னிப்பு உண்டு என்று விளக்கும் (5) மனந்திரும்புகிற பாவியை குறித்து இரட்சகர் சொல்லிய கெட்டகுமாரனுடைய உவமையின் பொருளும் (லூக். 15: அதி.) அப்போஸ்தலர் பாவங்களை மன்னிக்கும்படி அவர் அருளும் அதிகாரமும் (மத். 18: 18; யோவா. 20: 23) ஞானஸ்நானம் பெற்றபின்பு பாவத்தைச் செய்தவர்கள் மனந்திரும்பி மன்னிப்பைப்பெற இடமுண்டு என்பதைக்காட்டுகிறது. (6) அப்போஸ்தலன்மார் ஞானஸ்நானம் பெற்றபின்பு மனதாரமரணத்துக்கேதுவான பாவத்தில் விழுந்தவர்களுக்கு மன்னிப்பின் நம்பிக்கையை உணர்த்தி மனந்திரும்பும்படி எச்சரிக்கிற குறிப்புகளைப்பார்க்கிறோம். திருஷ்டாந்தரமாக சீமோன் மேகஸ் (அப். 8. 22 23.) சபைக்குப் புறம்பாக்கப்பட்ட கொரிந்தியன் (1 கொ. 5: 1-5; 2 கொ. 7: 10) ஒத்துப்பார் (7) 2. பேது. 3: 19; 1 யோவா. 1: 9; 2. 12; யாக். 5: 13-15; வெளி. 2 20-22 முதலியவசனங்களின்பொருளை நுட்பமாய் கவனித்தால் அப்படிப்பட்டவர்களுக்கு மனந்திரும்பி மன்னிப்பைப் பெறும்படியான வழி இருக்கிறது என்று விளங்கும்.

9. **கோள்ளைக்காரர் நோவேத்தியர்.** இவர்களுடைய கோட்பாடு இன்னதென்று முன்னே சொல்லியிருக்கிறோம் இவர்களுக்குத் தலைவனாகிய நோவேத்து மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் உரோமாபுரியில் குருவாயிருந்தார். அப்பட்டணத்தில் கண்காணிப்புக்காலியானபோது தனக்கு அதை



டைக்கும்படி பெருவாய் முயன்றார், முயன்றதோடு மூன்று கண்காணிகளை தனது பண்ணிக்கொண்டு அவர்களால் கண்காணியாக அபிஷேகமும் பெற்றார். என்றாலும் அந்த உத்தியோகத்தைச்செய்ய ஒருவரும் இடங்கொடுக்கவில்லை; ஆகவே அவர் தாமாய் சபையைப்பிரித்துக்கொண்டு, சுயாதீனமாயிருந்து துன்பத்தால் மார்க்கத்தை மறுதலித்தவர்களைத்திரும்ப சேர்க்கவே கூடாதென்று சொல்லி, அப்படிச்சேர்க்கிறவர்களைத் தப்பிதக்காரர் என்றுதீர்த்து காலாகோலம்பண்ணிக்கொண்டிருந்தார். அவருடைய பட்சத்தார் தங்களுக்கு காதாரியர் (Cathari) அதாவது சுத்தர் என்ற பேரைவைத்துக்கொண்டார்கள். இயூசிபியஸ் என்பவர் உரோமையில் ஒரு கண்காணிகள் சங்கம்கூட்டி நோவேத்தியர் கோட்பாட்டை நிராகரித்தார். மேலே காட்டிய பாசிலிதஸ், மொந்தானு, ஒரிஜன், அனபாப்திஸ்தர், கல்வீன், பியுரிட்டானர் முதலியவர்களுடைய கோட்பாடுகளையும் இந்தப்பிரமாணம் கண்டிக்கிறது.

10. **அங்கிலேயசபையின் உபதேசம்.** இப்பிரமாணத்தில் அடங்கிய அங்கிலேசபையின் போதனை அன்றாட பாவவிமோசன முறையிலும், சாம்பற்புதன், திரித்துவத்தின் 21-ம் 24-ம் ஞாயிறு சுருக்கச்செபத்திலும், வியாதியஸ்தரைச் சந்திக்கும் ஒழுங்கிலும் உறுதிப்படுகிறது. நாம் பரிசுத்த ஆவியைப்பெற்றபின்பும், கிருபையிலிருந்து விழுந்து விடுகிறதுண்டு என்றசத்தியம், அடுவெந்து 2-ம் ஞாயிற்று, திரித்துவத்தின் 13-ம், ஞாயிறுசுருக்கஜெபங்களாலும் ஞானோபதேசத்தில் "என்ஜீவகாலமெல்லாம் அவருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறதும்" என்னும் வாசகத்தாலும், லித்தோனா அடக்கம் பண்ணும் முறையில் "எங்கள் அந்தியகாலத்தில் நேரிடும் எந்தவேதனைகளினாலும்" என்னும் வாசகத்தாலும் உணர்த்தப்படுகிறது.

### பூர்வசாட்சிகள்.

(1) பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமின்னதென்பதைப்பற்றி ஜெரோம் என்பவர் சொல்லுகிறதாவது. "இதி

ஸ்துமார்க்க அற்புதங்களில் தேவனுடைய கிரியைகளைக்கண்டும், அவைபிசாசின் உதவியால் நடந்ததென்று எவர்கள் சொல்லுவார்களோ அவர்களே பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறவர்கள்” என்கிறார். (2) அலெக்சாந்திரியா கிளேமெந்து முழுஇருதயத்தோடு உண்மையாய் மனந்திரும்புகிற ஒவ்வொருவருக்கும் கதவுதிறக்கப் பட்டிருக்கிறது; பிதாவானவர் மனந்திரும்புகிறபிள்ளையை மகாசந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்” என்கிறார். (3) சிப்பிரியான் என்பவர்; விழுந்துபோனவர்களுக்குப் பாவமன்னிப்பு இல்லையென்று சிலர் துணிந்து சொல்லுகிறார்களே; பாவ அறிக்கை பண்ணுகிறவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்பது நிசமானால் ‘நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில்செய்த கிரியைகளைச் செய்வாயாக,’ என்று எப்படிச்சொல்லப்பட்டிருக்கும் என்கிறார்.

## ...INATION.

...1888.

...டியர் நிருபங்கள்,
...தப் பிரமாணங்கள். VI—XVI.
...ஆதாரங்களுடன்.)
...ர் விசுவாசப் பிரமாண விளக்கம் (பவுல் ...
...திருப்புகள்.) I. II. பாகங்கள்.

---

"The days of Examination in the Tami... districts will be the second Wednesday of Jul... and the following day."

*Date of Application.* "Not later than th... 30th, April."

**Application Fee, 4 As.**

---

BY THE SAME AUTHOR.

---

மகாத்மியபுராணம் Vol. I. இப்பொழுது விற்கப்ப... கிறது. விலை அணா 12.

Apply to A T. Scott, Esq.,
*Memorial Hall,*
*MADRA...*

*or Church Mission,*
*Printing Office,*
**PALAMCOTAH**